Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | வைகாசி 23 | 06-06-94 | திங்கட்கிழமை | ஓசை 108

DMC

யாழ்ப்பாணம் -6-6-1994

## புகைப்பிடிக்கும் ஒருவர் வாழ்வில் 22 வருடங்களை இழக்கிறார்

புகைப்பிடிப்பதால் ஒருவர் தனது வாழ்நாளில் 22 வருடங்களை இழக்கிறார் எனவும் உலகம் முழுவதும் ஆண்டொன்றுக்கு 30 லட்சம் மக்கள் புகைப்பிடிப்பதால் மரணமடைகின்றனர். எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. துரிதமாக அதிகரித்துவரும் புகைத்தல் பழக்கத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால் 2000-ம் ஆண்டளவில் அந்தத் தொகை ஒரு கோடியாக அதிகரிக்கும் (6-ம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மாணவர் எழுச்சி நாள்

# வடபகுதியெங்கும் அனுஷ்டிப்பு

## மாணவர்கள், ஆசிரியர்களென பெருமளவில் மக்கள் உணர்ச்சிகரப் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

**தமிழீழ மாணவர் எழுச்சிநாள் வடதமிழீழ மெங்கும் மிகவும் எழுச்சிகரமாக கொண்டாடப்பட்டது. தமிழீழத்தின் முதலாவது எழுச்சி நாளையொட்டி பாடசாலை மட்டத்திலும், கோட்டமட்டத்திலும் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில், பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் உட்பட அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் எனப் பலதரப்பினரும் கலந்து கொண்டனர்.**

நேற்றைய தினம் அனைத்துப் பாடசாலைகளிலும்இந்த எழுச்சி நாள் நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. காலை 8. 30 மணிக்கு தமிழீழத் தேசியக்கொடி ஏற்றலுடன் பாடசாலை மட்டத்திலான நிகழ்வுகள் ஆரம்பமாகி எழுச்சி உரைகள், கலை நிகழ்ச்சிகள் என்று பல்வேறு நிகழ்வுகள் நண்பகல்வரை தொடர்ந்து நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் கலந்துகொண்டதை அவதானிக்க முடிந்தது.

நேற்றைய மாலை நிகழ்வுகளாக கோட்ட மட்டத்திலான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்வுகளின் போது ஆரம்பத்தில் ஒவ்வொரு கோட்டத்திலும் மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்புகள் இடம்பெற்றன. இதைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றும் வைபவத்துடன் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து சிறப்புரைகள், எழுச்சி உரைகள் என்பனவும் நடைபெற்றன.

யாழ். கல்விக் கோட்டத்தின் எழுச்சி நாள் நிகழ்வுகள் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. யாழ். நகர மத்தியில் இருந்து பான்ட் வாத்திய இசையுடன் மாணவர்களின் அணிவகுப்பு இக்கல்லூரியை வந்தடைந்தது. இதைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியும் பின்னர் யாழ். கோட்டக் கொடியும் ஏற்றப்பட்டது. தொடர்ந்து எழுச்சி நாள் அறிக்கை வாசிக்கப்பட்டது.

எழுச்சிநாள் சிறப்புரையை திரு. பொன் தியாகம், திரு. குணராஜா, திரு. புலேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

வேலணை, ஊர்காவற்துறை கல்விக் கோட்டங்களது எழுச்சிநாள் நிகழ்வுகள் யாழ். சென் ஜோன்ஸ் அக்கடமி மண்டபத்தில் நடைபெற்றது. ஆரம்பத்தில் பான்ட் வாத்திய அணிவகுப்பும் அதைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரி எரிபொருள் கப்பல் கட்டணம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலைக்கான எரிபொருள்களைகப்பல் மூலம்எடுத்துவருவதற்கான கப்பல் கட்டணம் செலுத்தப்படதேவைஇல்லை என தெரியவருகின்றது.

இவற்றை எடுத்துவருவதற்கான கப்பல் கட்டணத்தை அத்தியாவசிய சேவைகள் பகுதியினரே பொறுப்பேற்கவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு ஒவ்வொருமாதமும் வடபகுதி நோக்கி வருகின்ற கப்பல்கள் ஏதாவது ஒன்றில் எரிபொருள்கள் எடுத்து வரப்படுகின்றன.

இத்தகவலை யாழ். போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார். (பா)(க)(தி)



நேற்று தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு சண்டிலிப்பாய் கோட்டத்தில் நடைபெற்ற மாணவர் எழுச்சி நாள் நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள், மாணவர்களில் ஒரு பகுதியினரை மேலுள்ள படத்தில் காணலாம்.

எழுச்சி அறிக்கை வாசிக்கப்பட்டது.

# தமிழீழ வைப்பகக் கிளைகள் நான்கு இடங்களில் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ வைப்பகக் கிளைகள் விரைவில் கிளிநொச்சி, தென்மராட்சி, வடமராட்சி, சுன்னாகம் பகுதிகளிலும் திறக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வைப்பகத்தின் செயற்பாட்டை பல்வேறு பகுதிகளுக்கும் விஸ்தரிக்கும் நோக்கில் இக் கிளைகள் திறக்கப்படவுள்ளன.

இதன் மூலம் மக்கள் தமது தேவையை குறுகிய நேரத்தில் பூர்த்தி செய்ய வசதி ஏற்படும் திறக்கப்படவுள்ள கிளைகளில் சகல வகையான கடன் வழங்கல் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# அடுத்தவாரம் மந்திரிசபை மறுசீரமைக்கப்படும்

(கொழும்பு)

அமைச்சரவை மறுசீரமைப்பு அடுத்த வாரமளவில் சிறிலங்கா ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன அமைச்சரவை மாற்றத்தின் போது காமினி திசாநாயக்கா, றொனி டி மெல், வடமேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா ஆகியோருக்கு அமைச்சர் பதவி கிடைக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காமினி ஏற்கனவே ஐ. தே. க. தேசியப்பட்டியல் எம். பியாக நியமிக்கப்பட்டுள்ளார். றொனி டி மெல்லும் காமினி ஜெயவிக்கிரம பெரேராவும் இவ் வாரம் தேசியப் பட்டியல் எம். பிகளாக நியமிக்கப்படவுள்ளனர். எம். எச். அமீட் மற்றும் ஆர். ஏ. டி. சிறிசேனவும் தமது எம். பி. பதவிகளை ராஜினாமா செய்து காமினியும், றொனி டி மெல்லும் எம். பியாக வர வழிவகுத்துள்ளனர். மற்றொரு தேசியப்பட்டியல் எம். பியான அலெக் றொபின்சன் இவ் வாரஆரம்பத்தில் இராஜினாமா செய்யவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் அனுபவசாலிகள் பாராளுமன்றம் செல்ல வழி வகுக்கும் முகமாக இத்தேசியப்பட்டியல் எம். பிகள் தாமாக இராஜினாமாசெய்ய ஜனாதிபதி விஜேதுங்காவும் ஐ. தே. க. பொதுச்செயலர் காமினி விஜயசேகராவும் தூண்டுதலாக இருந்ததாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

### தெளிவான கொள்கையை முன்வைத்தால்

# பொதுஜன ஐ. முன்னணிக்கு இளைஞர் வாக்களிப்பர்

(கொழும்பு)

தென்மாகாணசபை தேர்தலின்போது பொதுஜன ஐக்கிய முன்னணி தெளிவான ஒரு கொள்கையை வெளியிடாமையினாலேயே இளைஞர்களின் வாக்குகள் முழுமையாகக் கிடைக்க தவறியதாக ஜனதா விமுக்தி பெரமுனையில் இருந்து பிரிந்து செயல்படும் 'ஜனதா மிதுறு' தலைவர் தெரிவித்தார்.

'ஜனதா மிதுறு' தலைவர் மானிக விமலசூரிய பி. பி. சியின் சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதே வேளை 17 ஆண்டுகால ஐ. தே. க. ஆட்சி அகற்றப்பட வேண்டும் என்றும் எனவே இளைஞர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

தேர்தல் தொடர்பாக அவநம்பிக்கை கொண்டிராத தென்பகுதி இளைஞர்கள் தென் மாகாணசபைத் தேர்தலையடுத்து தேர்தல் பக்கம் இணைந்துள்ளதை காண முடிகிறது.

ஜனதா விமுக்தி பெர

(6ஆம் பக்கம் பார்க்க)

(6ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் மரணம்

(தென்மராட்சி)

சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கனடாவில் விபத்து ஒன்றில் மரணமாகியுள்ளார்.

அரசடி சங்கத்தானையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் மணாளன் (பாபு-வயது 20) என்பவரே இவ்வாறு மரணமானார். இவர் கனடாவில் மோட்டார் சைக்கிள் விபத்திலேயே மரணமானதாக தெரிய வருகின்றது. (86)

## போசாக்கு கருத்தரங்கு

(தொல்புரம்)

வலிமேற்கு சங்கானை பிரதேச செயலகம் நடாத்தும் போசாக்கு வாரத்தினையொட்டி கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

மேற்படி கருத்தரங்குகளும், இலைக்கஞ்சி அறிமுகமும் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும், நாளை பிற்பகல் 2.00 மணிக்கு மூளாய்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படையினர் மூளாய், பொன்னாலைகரையோரம் நோக்கி நேற்று அதிகாலை முதல் பீரங்கித் தாக்குதலை நடத்தினர். நேற்று பகல் முழுவதும்விட்டு விட்டு இப் பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டது.

மேலும் நேற்றிரவும் காரை நகரில் நிலை கொண்டுள்ள கடற்படையினரும், இராணுவத்தினரும் இக்கரையோரங்களை நோக்கி பலத்த பீரங்கி மற்றும் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் ஏற்பட்ட சேத விபரம் தெரிய வரவில்லை.

ஒரு பகுதியினரை மேலுள்ள படத்தில் காணலாம்.

# இன்று எமது போராட்டம் உலகில் புதிய கோட்பாட்டை எடுத்திருக்கிறது

## தியாகி சிவகுமாரன் நினைவு நிகழ்வில் இளம்பரிதி

எமது போராட்டத்தின் சர்வதேச நிலை என்ன அந்தஸ்து என்ன? எமது போராட்டம் என்ன நிலையில் இருக்கிறது? என்பவர்களுக்கு நாங்கள் தெளிவாகவே சொல்லுகின்றோம், எமது போராட்டமானது இன்று உலகில் ஒரு புதிய கோட்பாட்டை எடுத்திருக்கின்றது. இருபத்து இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு கைத்துப்பாக்கியுடன் ஆரம்பித்த போராட்டம், இன்று அவ்வரலாற்றின்பின்- ஒரு வீரனின் தியாகத்தின் பின் பெரிய முப்படைத் தளமான பூநகரித் தளத்தை அழித்து விழுத்தி இருக்கின்றது. இவ்வாறு தியாகி பொன். சிவகுமாரனின் 20ஆம் ஆண்டு நிறைவு நினைவு நிகழ்வில் கலந்து கொண்டுஉரையாற்றும்போது யாழ் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதிதெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

முன்னொரு காலத்திலே சிங்கள இனவெறிக்கு எதிராக கறுப்புக் கொடி காட்டிய பொழுதும் குரல்கொடுத்தபொழுதும் கூட அவர்களை கூண்டோடு அழித்த நிலைமை இருக்கின்றது.

ஆனால் ஆயிரத்துக்கு மேற்பட்ட சிப்பாய்களை அழித்து சிங்கள இனவாதிகளுடைய தளத்தை அழித்த போதும் இந்த சிங்கள அரசினால் சிறிலங்காவில் இருக்கின்ற தமிழர் மீது கூட அடிக்க முடிந்ததா? இதற்கு என்ன காரணம்? இன்று தமிழர்களுடைய வரலாற்றிலே தோற்றுவிக்கப்பட்டிருக்கின்ற - தமிழர்களுடைய இறைமைக்கான தேசியத்திற்கான பாதுகாப்பு படையின் பலம்தான் காரணம் என்பதை நீங்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

அங்கு உரையாற்றிய கடற்புலிகளின் அரசியல் பயிற்சி பள்ளிப் பொறுப்பாளர் வாஞ்சிநாதன் கூறுகையில் உலகத்திலே எந்தக் கோடியிலே புரட்சி நடந்தாலும், எந்த கோடியிலே விடுதலைப் போராட்டம் நடந்தாலும், அந்த விடுதலைப் போராட்டத்திற்கு, அந்த புரட்சிக்கு காலாக இருக்கின்றவர்கள் மாணவர்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தியாகிசிவகுமாரன்சிலைக்கு மக்கள் மலரஞ்சலி

(நமது நிருபர்)

தியாகி பொன். சிவகுமாரனின் 20வது ஆண்டு நினைவு தினம் நேற்றைய தினம் மாலை அவரது நினைவாலயத்தில் நடைபெற்றது.

கோப்பாய் வட்ட பொறுப்பாளர் திரு. சோழன் தலைமையில் நடைபெற்ற இந் நினைவு தின நிகழ்வில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் தியாகி சிவகுமாரனின் தாயார் ஆகியோர் ஈகச்சுடரை ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஏற்றிவைத்தார். தியாகி சிவகுமாரனின் சிலைக்கு திரு. பொன் தியாகமும், உருவப்படத்திற்கு சிவகுமாரனின் தாயாரும் மலர்மாலை

(6ஆம் பக்கம் பார்க்க)

# திருக்கோவில் பகுதியில் சுற்றிவளைப்பு அதிகரிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம்திருக்கோவில் பகுதியில் அதிரடிப்படையினர்அடிக்கடிசுற்றிவளைப்பு சோதனையில் ஈடுபடுவதாகவும், பலர் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் வீதிகளில் உள்ள சோதனைச் சாவடிகளிலும் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதாகவும் வாகனங்களில் கொண்டு செல்லப்படும் நெல், அரிசி, காய்கறி, மீன் உட்பட யாவும் வீதிகளில் கொட்டப்பட்டு சோதனைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை விவசாய

(6ஆம் பக்கம் பார்க்க)

வரி
விளம்பரம்

**துளிர்**
தமிழ் நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன்தரக் கூடியது. (8474)

**துளிர்**
ஏப்ரல், மார்ச் இதழ்கள் விற்பனையாகிறது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். (8473)

**சாரதா**
கலை இலக்கிய சஞ்சிகை அடுத்த இதழ் கோமல் சுவாமிநாதன் பேட்டியுடன் இலங்கைச் சிறப்பிதழ். எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8472)

**சமூக மாற்றத்திற்கான அரங்கு**
ஈழத்தமிழரிடையே சமூக மாற்றத்திற்கான வன்மையான அரங்கினை வளர்ப்பது பற்றிய ஒரு நாடக ஆக்கவியல் ஆய்வு- ஆசிரியர் க. சிதம்பரநாதன். (8470)

**சைனா மகசீன்**
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு வசந்தம் புத்தக நிலையம் புதிய பஸ் நிலையம் முன் யாழ்ப்பாணம் (8457)

**சேவல் குஞ்சுகள் விற்பனை**
2கிழமை வளர்ச்சியடைந்த பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்; (8452)

**சலனம்**
உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை. எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8471)

**'அக்கரைச் சீமையில்' நாவல்**
இங்கிலாந்து சென்ற ஓர் அழகிய இளம் தமிழ்ப் பெண்ணுக்கு என்ன நடந்தது? 250

# தொற்று நோயின் தாக்கம் சற்று குறைந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் தொற்று நோய்களது தாக்கம் சற்றுக் குறைவடைந்திருப்பதாக யாழ். போதனா மருத்துவ மனையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

சில தரவுகளை அடிப்படையாக வைத்தும் யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களது எண்ணிக்கையை வைத்தும் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு சில தொற்று நோய்களைத்தவிர ஏனையவற்றின் தாக்கம் குறைவடைந்துள்ளதைப் போன்று ஏனைய நோய்களின் தாக்கமும் குறைவடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (க. தி. பா.)

# கள்ளில் கலந்த நஞ்சினால் திருடர்கள் இருவர் பலி

(வவுனியா)

இரவு நேரத்தில் தென்னை மரத்தில் ஏறி திருட்டுத்தனமாக கள்ளிறக்கிக் குடிக்கும் வழக்கமுடைய இருவர் ஒரு நாள் அக் கள்ளினுள் கலந்திருந்த நஞ்சினைப்பருகியதால் உயிரிழந்தனர் மற்றுமொருவரின் நிலை கவலைக்கிடமானதாக உள்ளது.

இச்சம்பவம் கோயில் குஞ்சுக் குளம் என்னுமிடத்தில் சமீபத்தில் இடம் பெற்றது இச் சம்பவத்தில் மரணமானவர்கள் கோயில் குஞ்சுக் குளத்தைச் சேர்ந்த நா. சசீகரன்(14 வயது) அ.சஞ்சீவன் (13 வயது) ஆகியோராவர். த. ஈஸ்வரன் (16 வயது)என்பவர் கவலைக்கிடமான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி மூவரும் தென்னை மரங்களில் ஏறி திருட்டுத்தனமாக கள்ளை இறக்கிக் குடித்து வந்தனராம் சமீபத்தில் இரவு வேளை இவர்கள் திருட்டுத்தனமாக இறக்கிக் குடித்த கள்ளில் நஞ்சு கலந்திருந்ததனால் மூவரும் அவ்விடத்திலேயே மயக்கம் போட்டு விழுந்தனர்.

மறுநாள் காலை இவர்களது உறவினர்கள், இவர்கள் மூவரையும் வைத்திய சாலைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். அன்றைய தினம் நா. சசிகரன் என்பவரும் மறுநாள் அ. சஞ்சீவன் என்பவரும் மரணமானார்கள் த. ஈஸ்வரனின் நிலை கவலைக் கிடமாக இருந்து வருகிறது.

இது சம்பந்தமாக சீவல் தொழிலாளி ஒருவர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.**

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்-1 | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்-2 | உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) | தாவரவியல் | இரசாயனவியல் | பௌதீகவியல் | கணிதமும் புள்ளிவிபரவியலும் கணணி விஞ்ஞானம்.

ஓராண்டு திருப்திகர ... அடிப்படைச் சம்பளத்தினதும், நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான ஆண்டுப்படியின் 10% மும் ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டு தவணைப் புத்தகப் படியாகச் செலுத் தப்படும்.

1993 மே 12 ஆம் தேதிய 9 | 93 இலக்க பொதுநிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600 | - செலுத்தப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 1994-07-31.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக் கப்படுவர்.

யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்

யாழ் போதனா மருத்துவமனைக்கான

# கட்டுநிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''யாழ். போதனா மருத்துவமனைக்கு மாதாந்தம் ஒதுக்கப்படும் கட்டுநிதி போதுமானதாக இல்லை. இன்றைய சூழலில் இவ்வைத்திய சாலைக்கு ஒதுக்கப்படும் நிதியைக்கொண்டு சிறப்பான முறையில் வைத்தியசாலையை இயங்கவைப்பது சற்றுக் கடினமாக உள்ளது.'' இவ்வாறு யாழ் போதனா மருத்துவ மனையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இவ் வைத்தியசாலையின் பண நெருக்கடி குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் தமக்கு மாதாந்தம் சுமார் ஆறு மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் ஆனால் 4.1 மில்லியன் ரூபா மட்டுமே தற்போது மாதாந்தம் ஒதுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது

இப்பணப் பற்றாக்குறை குறித்து சுகாதார மகளிர் விவகார அமைச்சின் செயலாளருடன் இவ் வைத்திய சாலைப் பணிப்பாளர் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார் கடந்தமாதம் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின்போது தமது அமைச்சுக்கு திறைசேரியில் இருந்து போதிய நிதிகிடைப்பதில்லை என்று மேற்படி அமைச்சின் செயலாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

எமது வைத்தியசாலைக்கு குறைந்தபட்சம் 5 மில்லியன் ரூபாவாவது கட்டு நிதியாக ஒதுக்கப்படல்வேண்டும்என்று கோரி அமைச்சின் செயலாளருக்குகடிதமொன்றை அனுப்பி வைத்திருப்பதாக இவ் வைத்தியசாலைப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (க) (தி) (பா)

# யாழ் மாவட்டகூட்டுறவாளர் கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களினதும் தலைவர், பொது முகாமையாளர்களிற்கான கலந்துரையாடல் எதிர்வரும் புதனன்று காலை 10.00 மணிக்கு சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் அவர்கள் தலைமையில் யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்

இக் கூட்டத்தில் சிறிலங்கா அரசாங்கத்தின் விமானக் குண்டு வீச்சை எதிர்த்து கூட்டுறவாளர்களால் நடாத்தப் படவுள்ள கண்டன ஊர்வலம் சம்பந்தமான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

இக்கலந்துரையாடலுக்கு சகல பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள் ஏனைய இரண்டாம்படி கூட்டுறவுச் சங்க சமாசங்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள் ! பொது முகாமையாளர்களும். சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்களும் கலந்து ஆலோசனை வழங்கி மேற்படி கண்டன ஊர்வலத்தில் கூட்டுறவாளர்கள் மாபெரும் அளவில் பங்குபற்றக் கூடியவாறு ஒத்துழைப்புக்களையும் வழங்கி உதவுமாறு யாழ்ப்பாணமாவட்ட கூட்டுறவுச் சபை கேட்டுள்ளது.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து கீழே குறித்த பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1994-08-31 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் ... தவணைப் புத்தகப் படியாகச் செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் தேதிய 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்பமாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப் படுவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில்

## அபிப்பிராயப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது

தமிழீழ அபிவிருத்தியை ஏற்படுத்துவது தொடர்பாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் அபிப்பிராயங்கள் என்பவற்றை கோரியுள்ளது. இவ் ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் எழுத்து மூலம் பெறுவதற்கு வசதியாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்ட செயலகங்கள், கோட்ட செயலகங்கள் வட்டத் தொடர்பாளர் அலுவலகங்கள், ஆகியவற்றில் அபிப்பிராயப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

# எதிர்க்கட்சிகளின் கூட்டு வானவில்லைப் போன்றது

## ஜனாதிபதி வர்ணனை

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் வானவில்லைப் போன்றதே. வானவில்லின் வர்ணங்கள் எவ்வாறு மறைகின்றதோ அதே போல எதிர்க்கட்சிகளின் கூட்டும் மறைந்து விடும். இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அண்மையில் கண்டியில் மாவட்ட ஐ. தே. க. அமைப்பாளர்கள் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், நமது சக்தி தென்னிலங்கை தேர்தலின் பின்பு கூட குறைந்து விடவில்லை. அது அப்படியே இருக்கிறது. கடந்த மாகாண சபைத் தேர்தலைவிட பத்தாயிரம் வாக்கு மேலதிகமாக கிடைத்துள்ளது. 17 வருடங்களாக தொடர்ந்து ஆட்சி செய்வதால் சில தவறுகளும் ஏற்பட்டிருக்கலாம். நாம் எல்லோரும் மனிதர்களே; தெய்வங்கள் அல்லவே எனவும் தெரிவித்தார்.

## நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா வான்படைக்கு சொந்தமான புக்காரா குண்டுவீச்சு விமானம் ஒன்று நேற்று முன்தினம் மாலை 6.20 மணியளவில் வலிமேற்கு வான்பரப்பில் தாழப் பறந்து வட்டமிட்டுகுடியிருப்புக்களை நோட்டம் இட்டுச் சென்றது. (41)

# நினைவு கூருகின்றோம்...

**06. 06. 1994**

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை- கந்தளாப் பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 23 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு திருமலையில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது சீனன் வாடிப் பகுதியில் வைத்து சிறிலங்காப்படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போன 06 வயதுக் குழந்தை உட்பட 09 தமிழர்கள்.

பலாலி இராணுவ முகாமுக்கு அடகுநகை எடுக்கப் போன போது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ்- அச்சுவேலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். மார்க்கண்டு** (கந்தையா கனகரத்தினம் - முழங்காவில், பூநகரி - மன்னார்)

**லெப். பவான்** (கந்தையா நவநிதி- அச்சுவேலி தெற்கு - யாழ்)

ணுக்கு என்ன நடந்தது? 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை உண்மைக் கதைபோலச் சொல்கிறார். பூபாலசிங்கம் புத்தகசாலை.

(8411)

## தவறி விட்டது

வழக்குடன் சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்கள் பயிலுடன் ஒரு சிப் பாக்குடன் சாரமும், சிறு தொகைப் பணமும் கந்தர் மடத்துக்கும் செம்மணிக்கும் இடையில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம்காரியாலயத்தில்ஒப்டைக்கவும் சன்மானம்தரப்படும்

தொடர்பு ச. குகதாசன் கோகிலா தேநீர்ச்சாலை
கொடிகாமம்

8485

## கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடாத்தும் யாழ் மாவட்டப்பாடசாலைகளுக்கான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 17, 19 வயதுப் பிரிவு இறுதிப் போட்டிகள் இன்று நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும்.

இப் போட்டிகளில் 17 வயதுப் பிரிவு -மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட முன்னாள் துணைத்தளபதி லெப். கேணல் றீகன் நினைவுச் சுற்றுக்கேடயத்துக்காக யாழ் மத்திய கல்லூரியை எதிர்த்துயாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி அணியும் 19 வயதுப் பிரிவு - மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட முன்னாள் தளபதி லெப்- கேணல் ஜோய் நினைவுச்சுற்று வெற்றிக் கேடயத்துக்காக யாழ் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய அணியும் மோதும்.

ஞானம்.

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்தாரென தலைவராலும் பீடத்தலைவராலும் உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவருக்கு விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரை அளிக்கமுடியும் என்பதுடன் துணைவேந்தரால் ரூபா 6050-10X250 - 8,550/- (மாதமொன்றுக்கு)என்ற சம்பள அளவுத் திட்டத்தில் அவரை வைக்கவும் முடியும்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல்பிரிவு) டன் சித்திபெற்றுள்ள பட்டதாரிகள் உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்), ஓராண்டு காலம் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்பட்டு நிலையான சம்பளத்தில் விரிவுரையாளர் (தகுதிகாண்) தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

சம்பள அளவுத்திட்டம்

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1
ரூபா 12,725 - 8 X 325 —15,325/-

சிரேஷ்ட வீரிவுரையாளர் தரம் 2
ரூபா 10,650 - 5 X 325 —12,275/-

உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
ரூபா 5,270 மாதமொன்றுக்கு (நிலையானது)

இத்துடன்,

(அ) நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப்படியாக 1994 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளத்தின் 25% சதவீதத்திற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.

(ஆ) ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூபா 10,000/- படியும் அத்துடன் ஆண்டு

கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்தியபின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் 23x10 ச. மீ. அளவுடைய சுய முகவரியிட்ட ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

குறிப்பு:

விண்ணப்பப் படிவங்களையும் இதர விபரங்களையும் கொழும்பு 13, ஆட்டுப்பட்டித்தெரு, 154 ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாணக் கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்,**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.
1994-06-02 (சி-9601)

1994-08-31 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. பயிராக்கவியலில் பேராசிரியர்
2. விவசாய பொருளியலில் பேராசிரியர்
3. விவசாய இரசாயனவியலில் பேராசிரியர் (மண் விஞ்ஞானம்)
4. மிருக விஞ்ஞானத்தில் பேராசிரியர்
5. விவசாய உயிரியலில் பேராசிரியர்
6. விவசாய பொறியியலில் பேராசிரியர்
7. கடலக உயிரியலில் பேராசிரியர்
8. நுண்கலையில் பேராசிரியர்
9. வர்த்தகத்தில் பேராசிரியர்
10. வியாபார நிர்வாகத்தில் பேராசிரியர்
11. வரலாற்றில் பேராசிரியர்
12. பொருளியலில் பேராசிரியர்
13. சைவ சித்தாந்தத்தில் பேராசிரியர் (அறக்கொடை தவிசு)

**சம்பள அளவுத்திட்ட**

பேராசிரியர்
— ரூபா 16,100 — 6 X 400 18,500/-

இத்துடன்

அ) நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப் படியாக 1994 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளத்தில் 25 % சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

ஆ) ஒவ்வொருவருக்கும், ஆண்டுக்கு ரூபா 10,000/- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தினதும், நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான ஆண்டுப் படியின் 10 வீதமும் ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத்

கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியானகாசுக்கட்டளை - தபாற் கட்டளையுடன் 23 X 10 ச.மீ அளவுடைய, சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரை, யொட்டப்பட்டகடிதஉறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

குறிப்பு:-

விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும்கொழும்பு-13, ஆட்டுப்பட்டித் தெரு 154ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக்களஞ்சியத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்.**
யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1994-06-03

(சி-9600)

**லெப். பவான்** (கந்தையா நவநிதி- அச்சுவேலி தெற்கு - யாழ்)

**லெப். ரகு** (இராசதுரை ரகு- 36/4, இராமநாதன் வீதி- யாழ்)

**2-ம் லெப். அச்சுதன்** (ஈஸ்வரலிங்கம் குமாரலிங்கம் - நெடியகாடு - வல்வெட்டித்துறை - யாழ்)

**குமணன்** (சதாசிவம் ரங்கநாதன் -அம்பனை, அளவெட்டி - யாழ்)

**நீதவான்** (நடராசா சிறிஸ்கந்தராசா - நவாலி வடக்கு, மானிப்பாய் - யாழ்)

**பூபன்** (தங்கையா சத்திவேல் - ஜீவன் வீதி, 2-ம் குறுக்குத்தெரு, குருநகர் - யாழ்)

யாழ்-கொல்லங்கலட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**லவன்** (சந்திரசேகரம் லவக்குமார் லவக்குமார் வீதி, அரியாலை-யாழ்)

யாழ்-கோட்டைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மின்சார விபத்தில் எமைப்பிரிந்த,

**மோகன்** (சின்னத்துரை யோகேந்திரன் - தாவடி தெற்கு, கொக்குவில்-யாழ்)

இதே தினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது படுகொலை செய்யப்பட்ட 08 பெண்கள் உட்பட 25 தமிழர்கள்.

1988-ம் ஆண்டு மட்டுநகரில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட அப்பகுதி பிரஜைகள் குழுத் தலைவர்.

1989-ம் ஆண்டு யாழ்-பருத்தித்துறை, தம்பசிட்டிப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ராஜன்- விசு** (ஏரம்பமூர்த்தி விநாயகமூர்த்தி-வி. எம். வீதி, பருத்தித்துறை-யாழ்)

இதே சம்பவத்தில் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**கிருபா** (நடராசா கிருபாகரன்-பத்திரகாளி கோயில் ஒழுங்கை-பருத்தித்துறை)

1991-ம் ஆண்டு கிளி-ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**துஷ்யந்தன்** (ச. பாஸ்கரன் - புதுக்குடியிருப்பு- மட்டு)

மன்னார்-சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**றேணு** (கறுப்பையா விஜயரட்ணம்-155, கடற்கரை வீதி-யாழ்)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9602)

# கணிதம் O\L

பயிற்சி 5 இற்கான விடைகள்

(1) $4\frac{1}{2}$ X  (2) -10  (3) 4.65

(4) $5\frac{2}{3}$  (5) $4\frac{11}{24}$, $5\frac{5}{12}$, $6\frac{3}{8}$

(6) 7.51, 8.81, 10.11  (7) 5

கூட்டல் தொடர் தரப்படுமிடத்து கூட்டுத்தொகை காணப்பட வேண்டுமாயின் முதலில் $Tn = a + (n-1)d$ எனும் வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி இறுதி உறுப்பைப் பெற்று பின்னர் $Sn = \frac{n}{2}(a+l)$ எனும்வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி கூட்டுத் தொகையினை கண்டோம்.

இனி இவ்விரு வாய்ப்பாடுகளையும் பயன்படுத்தி கூட்டுத்தொகைக்குப் பொதுவான ஓர் வாய்ப்பாட்டைப் பெற முடியுமா எனப் பார்ப்போம்.

Tn என்பது n ம் உறுப்பு ஆகும். ஆனால் கருதப்படும் கூட்டல் தொடரின் இறுதி உறுப்பு l எனக் கொள்ளலாம்.

ஆகவே $Tn = l$ ஆகும்.

ஆனால் $Tn = a + (n-1)d$ என்பதனால்

$l = a + (n-1)d$ எனக் கொள்ளலாம்.

$$Sn = \frac{n}{2}(a + l)$$

$$= \frac{n}{2}(a+a+(n-1)d)$$

$$= \frac{n}{2}(2a+(n-1)d)$$

$$Sn = \frac{n}{2}(2a+(n-1)d)$$

உதாரணம்: 1

5, 12, 19 ...... எனும் கூட்டல் தொடரின் முதல் 14 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?

$a = 5$

$d = 7$

$n = 14$

$S_{14} = ?$

$Sn = \frac{n}{2}(2a+(n-1)d)$ இல் பிரதியிட

$$S_{14} = \frac{14}{2}(10+ 14-1) 7)$$

$$= 7(10+91)$$

$$= 7 \times 101$$

$$= 707$$

∴ 14 உறுப்புகளின் கூட்டுத்தொகை 707 ஆகும்.

உதாரணம்: 2

0.6, 1.7, 2.8 - - - - எனும் கூட்டல் தொடரின் முதல் 17 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?

$a = 0.6$  $d = 1.1$  $n$ 17  $S_{17}$ ?

$$Sn = \frac{n}{2} 2a+(n-1)d)$$

$$= \frac{17}{2}(2 \times 0.6+16 \times 1.1)$$

$$= \frac{17}{2}(1.2+17.6)$$

$$= \frac{17}{2} \times 18.8$$

$$= 159.8$$

∴ 17 உறுப்புக்களின் கூட்டுத்தொகை 159.8 ஆகும்

உதாரணம்: 3

பயிற்சி 6

(i) 9, 4, —1,.... எனும் கூட்டல் தொடரில் 47 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?

(ii) 8.7, 11.8, 14.9 எனும் கூட்டல் தொடரில் முதல் 74 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?

(iii) பயிற்சி 3 வினா எண் (4) அ வின்படி இராகினியின் 16 வது பிறந்த நாளிலன்று பணத்தினை வைப்புச் செய்தவுடன் வங்கியிலுள்ள பணத்தொகை அனைத்தையும் மீளப் பெற்றபோது ரூபா 22001 கிடைத்தது. இங்கு கிடைத்த மொத்த வட்டி யாது?

(iv) உண்டியலில் பணத்தினைச் சேர்த்து வரும் பிரதீபன் ஒவ்வொரு நாளும் சேர்க்கும் பணத்தினைவி - அதற்கு அடுத்தநாள் ரூ. 3-50ஐ அதிகமாகச் சேர்த்து வந்தான் முதல் நாள் ரூபா 7-50 ஐ அவன் உண்டியலில் இட்டான் ஆயின்,

(அ) 75 வது நாளில் எவ்வளவு தொகை பணத்தினை உண்டியலில் இடுவான்?

(ஆ) 75வது நாள் முடிவில் எவ்வளவு பணத்தினை உண்டியலிலிருந்து பெறுவான்?

(v) 6, 7.4, 8.8 .. எனும் கூட்டல் தொடரில் 13 ம் உறுப்பில் ஆரம்பித்து வரும் 8 உறுப்புக்களின் கூட்டுத்தொகையினைக் காண்க.

## 1.9 கூட்டுத்தொகை தரப்படின் உறுப்புகளின் எண்ணிக்கையைக் கணித்தல்

உதாரணம் 1.

2, 5, 8 .. எனும் கூட்டல் தொடரில் கூட்டுத் தொகை 222 ஆவதற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய உறுப்புக்களின் எண்ணிக்கை யாது?

$a = 2$  $d = 3$  $Sn = 222$  $n = ?$

$$Sn = \frac{n}{2}[2a+(n-1)d]$$

$$222 = \frac{n}{2}[4+(n-1)3]$$

$$222 \times 2 = n[4+3n-3]$$

$$444 = 4n+3n^2-3n$$

$$444 = 3n^2+n$$

$$0 = 3n^2+n-444$$

$$3n^2+n-444 = 0$$

$$3n^2-36n+37n-444 = 0$$

$$3n(n-12)+37(n-12) = 0$$

$$(3n+37)(n-12) = 0$$

$$(3n+37) = 0 \text{ or } (n-12) = 0$$

$$3n = -37 \text{ or } n = 12$$




$$2n^2+89n-2413 = 0$$

$$(2n+127)(n-19) = 0$$

$$(2n+127) = 0 \text{ or } (n-19) = 0$$

$$n = -\frac{127}{2} \text{ or } n = 19$$

$n = -\frac{127}{2}$ பொருந்தாது

∴ $n = 19$

∴ 19 உறுப்புகளின் கூட்டுத்தொகை $86\frac{5}{28}$ ஆகும்

## 2.0 கூட்டுத்தொகை தரப்படின் ஒருங்கமை சமன்பாட்டினைப் பெறல்

உதாரணம் 1.

ஓர் கூட்டல் தொடரின் முதல் 14 உறுப்புக்களின் கூட்டுத்தொகை 38 ஆகும். இந் நிபந்தனையைத் திருப்தி செய்யும் a, dயைக் கொண்ட சமன்பாடு ஒன்றினைத் தருக.

$n = 14$,  $Sn = 38$

$$Sn = \frac{n}{2}[2a+(n-1)d]$$

$$38 = \frac{14}{2}[2a+13d]$$

$$38 = 7[2a+13d]$$

$$14a+91d = 38$$

உதாரணம் 2

ஓர் கூட்டல் தொடரின் இரண்டாம் உறுப்பு $\frac{5}{6}$ ஆவதோடு. அதன் முதல் 13 உறுப்புக்களின் கூட்டுத் தொகை $32\frac{1}{2}$ ஆகும்.

(அ) இந்நிபந்தனைகளைத் திருப்தி செய்யும் இரு சமன்பாடுகளைத் தருக.

(ஆ) இத்தொடரில் $2\frac{5}{6}$ எத்தனைய வது உறுப்பு எனக் காண்க.

(அ) $a+d = \frac{5}{6}$  (1)

$n = 13$,  $Sn = 32\frac{1}{2}$

$$Sn = \frac{n}{2}[2a+(n-1)d]$$

$$32\frac{1}{2} = \frac{13}{2}[2a+12d]$$

$$\frac{65}{2} \times \frac{2}{13} = 2a+12d$$

$$5 = 2a+12d$$

$a+d = \frac{5}{6}$ — (1)

$2a+12d = 5$ — (2)

(ஆ) $2a+12d = 5$ — (2)

(1) × 2 —> $2a+2d\ \frac{5}{3}$  (3)

(2) — (3) —> $10d = \frac{10}{3}$

$$d = \frac{1}{3}$$

$d = \frac{1}{3}$ ஐ சமன்பாடு (1) ல் பிரதியிட

அடுத்த வார
மாணவர் அரங்கில்

க. பொ. த. உயர்தர மாணவர்களுக்காக வே. கருணாகரன் எழுதும் பொருளியல் பாடத் தொடரில் கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் இலங்கையின் சமூக பொருளாதாரத் தரவுகள் என்னும் விடயங்கள் இடம் பெறவுள்ளன.

$$a+d = \frac{5}{6}$$

$$a+\frac{1}{3} = \frac{5}{6}$$

$$a = \frac{5}{6} - \frac{1}{3}$$

$$a = \frac{1}{2}$$

$a = \frac{1}{2}$,  $d = \frac{1}{3}$,  $Tn = 2\frac{5}{6}$  $n = ?$

$$Tn = a+(n-1)d$$

$$2\frac{5}{6} = \frac{1}{2}+(n-1)\frac{1}{3}$$

$$2\frac{5}{6} = \frac{1}{2}+\frac{1}{3}n - \frac{1}{3}$$

$$2\frac{5}{6} = \frac{1}{6}+\frac{1}{3}n$$

$$2\frac{5}{6} - \frac{1}{6} = \frac{1}{3}n$$

$$2\frac{2}{3} = \frac{1}{3}n$$

$$\frac{8}{3} \times 3 = n$$

$$8 = n$$

$2\frac{5}{6}$ என்பது எட்டாம் உறுப்பு ஆகும்.

## 2.1 nஆம் உறுப்பு தரப்படின் தொடரைக் காணல்

உதாரணம் 1.

ஓர் கூட்டல் தொடரில் n ஆம் உறுப்பு $3n-2$ ஆகும். இத்தொடரைக் காண்க.

$$Tn = 3n-2$$

$$T_1 = 3 \times 1 - 2$$

$$= 1$$

$$T_2 = 3 \times 2 - 2$$

$$= 4$$

$$T_3 = 3 \times 3 - 2$$

$$= 7$$

∴ தொடர் 1, 4, 7.....

உதாரணம் 2.

ஓர் கூட்டல் தொடரில் n ஆம் உறுப்பு $6n - \frac{1}{3}$ ஆகும்.

(அ) இத்தொடரின் முதல் மூன்று உறுப்புக்களையும் தருக

ஆ) இத்தொடரில் (n — 2) ஆம் உறுப்பைக் காண்க

இ) இத்தொடரில் $41\frac{2}{3}$ என்பது எத்தனையாம் உறுப்பு எனக் காண்க

அ) $Tn = 6n - \frac{1}{3}$

$T1 = 6 \times 1 - \frac{1}{3}$  $T2 = 6 \times 2 - \frac{1}{3}$  $T3 = 6 \times 3 - \frac{1}{3}$

$= 6 - \frac{1}{3}$  $= 12 - \frac{1}{3}$  $= 18 - \frac{1}{3}$

$= 5\frac{2}{3}$  $= 11\frac{2}{3}$  $= 17\frac{2}{3}$

∴ தொடர் $5\frac{2}{3}$, $11\frac{2}{3}$, $17\frac{2}{3}$ ......

ஆ) $Tn = 6n - \frac{1}{3}$

$$T(n-2) = 6(n-2) - \frac{1}{3}$$

$$= 6n - 12 - \frac{1}{3}$$

$$= 6n - 12\frac{1}{3}$$

∴ (n - 2) ஆம் உறுப்பு $6n - 12\frac{1}{3}$ ஆகும்

(இ) $Tn = 6n - \frac{1}{3}$ இதில் $Tn = 41\frac{2}{3}$ ஐ பிரதிசெய்து n ஐக் காணமுடியும்.

$$Tn = 6n - \frac{1}{3}$$

$$41\frac{2}{3} = 6n - \frac{1}{3}$$

$$41\frac{2}{3} + \frac{1}{3} = 6n$$

$$42 = 6n$$

$$7 = n$$

$41\frac{2}{3}$ என்பது 7 ஆம் உறுப்பு ஆகும்.

★ அடுத்த இதழில் O / Lகூட்டல் தொடர் கடந்த கால வினாக்கள் சேர்த்துக் கொள்ளப்படும்

த. நித்தியானந்தம் சரசாலை

உதாரணம்: 3

$3\frac{1}{4}, 3\frac{11}{28}, 3\frac{15}{28}$ - - - - - எனும் கூட்டல்

தொடரில் முதல் 19 உறுப்புகளின் கூட்டுத் தொகையைக் காண்க

$a = 3\frac{1}{4} \quad d = \frac{1}{7} \quad n = 19 \quad S_{19} = ?$

$$S_n = \frac{n}{2}\left(2a + (n-1)d\right)$$
$$= \frac{19}{2}\left(\frac{13}{4} \times 2 + 18 \times \frac{1}{7}\right)$$
$$= \frac{19}{2}\left(\frac{13}{2} + \frac{18}{7}\right)$$
$$= \frac{19}{2} \times \frac{91+36}{14}$$
$$= \frac{19}{2} \times \frac{127}{14}$$
$$= \frac{2413}{28}$$
$$= 86\frac{5}{28}$$

∴ முதல் 19 உறுப்புகளின் கூட்டுத்தொகை $86\frac{5}{28}$ ஆகும்

உதாரணம்: 4

முதல் உறுப்பு (—4) உம் பொது வித்தியாசம் (—9) ஆகவுள்ள கூட்டல் தொடர் ஒன்றின் 14ம் உறுப்பு தொடங்கி 8 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?

இவ்வினாவைப் பொறுத்தவரை 14ம் உறுப்பில் ஆரம்பித்து தொடர்ந்து எட்டு உறுப்புக்களின் கூட்டுத்தொகையினைக் காணவேண்டும். ஆகவே 14ம் உறுப்பு கூட்டுத்தொகை காணவேண்டிய தொடரின் 1ம் உறுப்பாகக் கொள்ள வேண்டும்.

$$T_n = a + (n-1)d$$
$$T_{14} = -4 + 13 \times -9$$
$$= -4 + (-117)$$
$$= -4 - 117$$
$$= -121$$

$a = -121 \quad d = -9 \quad n = 8 \quad S_8 = ?$

$$S_n = \frac{n}{2}\left(2a + (n-1)d\right)$$
$$S_8 = \frac{8}{2}\left[-242 + 7 \times -9\right]$$
$$= 4\left[-242 + (-63)\right]$$
$$= 4\left[-242 - 63\right]$$
$$= 4 \times -305$$
$$= -1220$$

∴ 14ம் உறுப்பு தொடங்கி வரும் எட்டு உறுப்புக்களின் கூட்டுத்தொகை —1220 ஆகும்.

$$n = \frac{-37}{3}$$

ஆனால் $\frac{-37}{3}$ பொருந்தாது

∴ $n = 12$

∴ 12 உறுப்புகளின் கூட்டுத்தொகை 222 ஆகும்

உதாரணம்: 2

1.4, 2.5, 3.6 ... எனும் கூட்டல் தொடரில் எத்தனை உறுப்புக்களின் கூட்டுத் தொகை 63.5 ஆகும்.

$a = 1.4 \quad d = 1.1 \quad S_n = 63.5 \quad n = ?$

$$S_n = \frac{n}{2}\left[2a + (n-1)d\right]$$
$$63.5 = \frac{n}{2}\left[2.8 + (n-1)1.1\right]$$
$$63.5 \times 2 = n\left[2.8 + 1.1n - 1.1\right]$$
$$127.0 = n\left[1.7 + 1.1n\right]$$
$$127 = 1.7n + 1.1n^2$$
$$0 = -127 + 1.7n + 1.1n^2$$
$$1.1n^2 + 1.7n - 127 = 0$$
$$11n^2 + 17n - 1270 = 0$$
$$11n^2 + 127n - 110n - 1270 = 0$$
$$11n(n+17) - 110(n+17) = 0$$
$$(n+17)(11n - 110) = 0$$
$$(n+17) = 0 \text{ OR } (11n - 110) = 0$$
$$n = -17 \text{ OR } 11n = 110$$
$$n = -17 \quad n = 10$$

∴ $n = -17$ பொருந்தாது

∴ 10 உறுப்புகளின் கூட்டுத்தொகை 63.5

உதாரணம்: 3

$3\frac{1}{4}, 3\frac{11}{28}, 3\frac{15}{28}, \ldots$ எனும் கூட்டல் தொடரின் எத்தனை உறுப்புக்களின் கூட்டுத் தொகை $86\frac{5}{28}$ எனக் காண்க

$a = 3\frac{1}{4}, \; d = \frac{1}{7}, \; S_n = 86\frac{5}{28}, \; n = ?$

$$S_n = \frac{n}{2}\left[2a + (n-1)d\right]$$
$$86\frac{5}{28} = \frac{n}{2}\left[3\frac{1}{4} \times 2 + (n-1)\frac{1}{7}\right]$$
$$\frac{2413}{28} \times 2 = n\left[\frac{13}{4} \times 2 + (n-1)\frac{1}{7}\right]$$
$$\frac{2413}{14} = n\left[\frac{13}{2} + (n-1)\frac{1}{7}\right]$$
$$\frac{2413}{14} = \frac{13}{2}n + \frac{1}{7}n^2 - \frac{1}{7}n$$
$$\frac{2413}{14} = \frac{89}{14}n + \frac{1}{7}n^2$$
$$2413 = 89n + 2n^2$$

# கணக்கியல் A/L

## அலகு 3

### செலவினங்கள் (Expend ture)

### 3.0 அறிமுகம்:-

நடைமுறையில் வியாபாரத் தாபனங்களின் செயற்பாடுகளுடன் வேறுபட்ட செலவினங்கள் ஏற்படுகின்றன. நிறுவனங்கள் 'பயன்'' கருதி செய்யும் செலவினங்கள் பொதுவாக அப் பயன்பாட்டுக்கான கால அளவின் அடிப்படையில் வருமாறு வகைப் படுத்தப்படும்:

(அ) மூலதனச் செலவினங்கள்
(ஆ) வருமானச் செலவினங்கள்

### 3.1 மூலதனச் செலவினங்கள் (Capital Expenditure)

தாபனங்களினால் ஒன்றிற்கு மேற்பட்ட வருடங்களுக்குப் பயன்தரக்கூடிய வகையில் செய்யப்படும் செலவினங்களே மூலதனச் செலவினங்களாகும். இவை நிலையான சொத்துக்களை உருவாக்கஞ் செய்வதற்கோ அல்லது கொள்வனவு செய்வதற்கோ அல்லது அவற்றை தாபிப்பதற்கோ அல்லது அவற்றின் இயலுமையை (Capacity) அதிகரிப்பதற்கோ ஏற்படும் செலவுகளாக இருக்கும் இத்தகைய மூலதனச் செலவுகள் ஐந்தொகையில் நிலையான சொத்தாகவே பிரதிபலிக்கப்படும்

பின்வருவனவற்றை மூலதனச் செலவுகளின் உதாரணங்களாகக் கொள்ளலாம்:

(i) நிலையான சொத்துகளுக்கான கொள்விலைகள்
(ii) அவற்றை நிறுவனத்திற்கு கொண்டுவரும்வரை ஏற்படும் செலவுகள்
(iii) கட்டடங்களை வாங்குவதற்கான சட்டச் செலவுகள்
(iv) பொறிகள், மோட்டார்கள் என்பவற்றின் முக்கிய உதிரிப்பாகங்களை மாற்றுவதற்கான செலவுகள்

### 3.2 வருமானச் செலவுகள் (Revenue Expenditure)

தாபனங்களினால் குறித்த ஒரு கணக்கீட்டு காலப் பிரிவுக்குட்பட்ட பயன்பாட்டைத் தரக்கூடிய வகையில் மேற் கொள்ளப்படும் செலவினங்கள் வருமானச் செலவுகளாகும் இவை பெரும்பாலும் நிலையான சொத்துகளைப் பராமரிப்பதற்கு ஏற்படுபவையாகவும், வருமானத்தை உழைக்கும் நோக்குடன் அன்றாடம் மீண்டும் மீண்டும் ஏற்படும் செலவுகளாகவும் இருக்கும்

பின்வருவன வருமானச் செலவினங்களுக்கான உதாரணங்களாகும்:

(i) உற்பத்தி வர்த்தக முயற்சிகளை மேற்கொள்வதற்குத் தேவையான மேந்தலைச் செலவுகளும் நிலைய, நிர்வாக, விற்பனை விநியோகச் செலவுகளாகும்.
(ii) மோட்டார், பொறிகளைப் பேணுகின்ற செலவுகள்
(iii) தேய்மானங்கள்
(iv) கடன்களுக்கான வட்டிகள்

மூலதனச் செலவுகள் நிலையான சொத்துக்களின் பெறுமதியைக் கூட்டும் இயல்புடையன ஆனால் வருமானச் செலவுகள் நிலையான சொத்துக்களின் பெறுமதியைக் கூட்டுமியல்புடையன அல்ல

பயிற்சி:

(அ) பின்வரும் செலவினங்கள் ஒவ்வொன்றும் மூல


ஆக்கம்:

**S. K. பிரபாகரன்** B.B.A.(Spl)

ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி


தனச் செலவுகளா, அல்லது வருமானச் செலவுகளா எனக் குறிப்பிடுக

(i) மோட்டார் வானுக்கான பெற்றோல் செலவு
(ii) மோட்டார் வானை வாங்கும் விலை
(iii) மோட்டார் வானுக்கான பழுதுபார்ப்புகள்
(iv) மோட்டார் வானுக்கும் மேலதிக மின் சாதனங்களைப் பொருத்துதல்
(v) இயந்திரங்களுக்குப் பயன்டுத்தப்படும் பெற்றோலியச் செலவுகள்
(vi) நிறுவனமொன்று பொறிகள் மீது 1500 ரூபா செலவிட்டது இதில் முக்கிய உதிரிப்பாகமொன்றைபொருத்துவதற்காகக் கொடுத்த 1000/- உம், பழுது பார்த்தல்களுக்கான 500/- உம் அடங்கும்
(vii) புதிய கட்டடத்துக்கான வர்ணம் பூசுதல் செலவு
(viii) மூன்று வருடங்களின் பின்னர் அதே கட்டடத்துக்கான வர்ணம் பூசுதல் செலவு.

விடைகள்:-

(i) வருமானம்
(ii) மூலதனம்
(iii) வருமானம்
(iv) மூலதனம்
(v) வருமானம்
(vi) வருமானம் - 500/-
மூலதனம் - 1000/-
(vii) மூலதனம்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கணக்கியல்

(viii) வருமானம்

(ஆ) 1985 ஏப்ரல் 01-ல் வசபா கம்பனியினது ஏடுகளில் காணப்பட்ட மீதிகள்
பொறி விருட்சக் கணக்கு 372 000
பொறி விருட்ச தேய்மான ஏற்பாட்டுக் கணக்கு 205 400

கம்பனியின் கொள்கையானது நிதியாண்டு முடிவுகளில் காணப்படும் பொறிகளின் மீது குறைந்து செல்லும் மீதிக்கு ஆண்டுக்கு 20%-ல் தேய்மானமிடுவதாகும்.

1 செப்ரெம்பர் 1985-ல் கம்பனி சில பொறிகளை 13 700/-க்கு விற்பனை செய்தது. அவை 31 ஒ-டோபர் 1981-ல் 36 000/- கொள்விலையில் வாங்கப்பட்டது. இதற்கு மேலதிகமான நிறுவுதல் செலவுகளுக்கென 6300/- செலவிடப்பட்டது. இயலுமையை அதிகரிப்பதால் புதிய மோட்டார் 1983 டிசம்பரில் 4400-ல் பொருத்தப்பட்டது. 2700 ரூபா மேலதிகப் பராமரித்தல் செலவாக 1984-ல் கொடுபட்டது. கம்பனி புதிய பொறியொன்றை 30 நவம்பர் 1985-ல் 96000/-ல் கொள்வனவு செய்தது. இது 7000/- தாபித்தல் செலவுகள் உள்ளடங்கலாகும்

தயாரிக்குக:
(1) பொறித் தொகுதி கணக்கு - 31.3.86-ல் முடிந்த ஆண்டுக்கு
(2) பொறித்தொகுதி தேய்மான ஏற்பாட்டுக் க/கு - 31.3.86-ல் முடிந்தஆண்டுக்கு
(3) பொறித் தொகுதி முடிபு செய்தல் கணக்கு 31 3.85-ல் முடிந்த ஆண்டுக்கு

(Chartered Association of Certified Accountants)

பொறித்தொகுதிக் க/கு

| | | | |
|---|---|---|---|
| 1.4.85 மீதி | 372000 | பொறிமுடிபுசெய்தல் | 44400 |
| 30 11.85காசு | 96000 | 31.3.86 மீ செ | 423 600 |
| | 468 000 | | 468 000 |
| 1.4.86 மீ/வ | 423 600 | | |

பொறிகள் தேய்மான ஏற்பாட்டுக்க/கு

| | | | |
|---|---|---|---|
| பொறிமுடிபு செய்தல் | 25200 | 1 . 4 . 85 மீதி | 205400 |
| 31 3 86மீ/செ | 228880 | 31.3.86 பெ. தேய்வு | 48680 |
| | 254080 | | 254080 |
| | | 1.4 86 மீ/வ | 228880 |

பொறிகள் முடிபு செய்தல்க/கு

| | | | |
|---|---|---|---|
| பொறிகள் | 44400 | காசு | 13700 |
| | | பெ தே. ஏற் | 25200 |
| | | இலாபநட்டக் க/கு | 5500 |
| | 44400 | | 44400 |

## 3.3 கூட்டுச் செலவுகள் (Joint Expenditure)

சில சந்தர்ப்பங்களில் ஒரு செலவின விடயம் மூலதனச் செலவுகளாகவும் வருமானச் செலவுகளாகவும் வகுக்கப்படக் கூடியதாகக் காணப்படின் அவை கூட்டுச் செலவுகள் எனப்படும்.

உதாரணம்:-

கட்டட நிர்மாணி ஒருவர் நிறுவனமொன்றில் மேற்கொண்ட வேலைகள் தொடர்பில் மொத்தமாக 3000/-க்கு பற்றுச்சீட்டு ஒன்றை வழங்கினார். இதில் $\frac{1}{3}$ பங்கு திருத்தல் வேலைகளுக்கும், $\frac{2}{3}$ பங்கு அதன் அபிவிருத்திக்குமாகும். எனவே இதில் 1000/- வருமானச் செலவுகளாக இலாப நட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்படும். 2000/- மூலதனச் செலவாகக் காணப்படுவதால் கட்டடப் பெறுமதியுடன் கூட்டப்பட்டு ஐந்தொகையில் காட்டப்படும். இங்கு ஒரே சிட்டையில் இரு செலவுகளும் சேர்த்துக் காட்டப்பட்டிருப்பதால் கூட்டுச் செலவு எனப்படும்.

## 3.4 மூலதனப் பற்றுச் சீட்டும் வருமானப் பற்றுச் சீட்டும்(Capital and Revenue Receipts

மூலதனச் செலவுடைய விடயமொன்று விற்பனை செய்யப்படும்போது அதற்கான பற்றுச்சீட்டு மூலதனப் பற்றுச்சீட்டு எனப்படும்.

உதாரணமாக ஒரு மோட்டார் வான் 5000/-க்கு வாங்கப்பட்டு 5 வருடங்களின் பின்னர் அது 750/- க்கு விற்பனை செய்யப்படுகின்றது இங்கு 5000/- ரூபா மூலதனச் செலவாகவும் 75 /- மூலதனப் பற்றுச் சீட்டு ஆகவும் கருதிக் கொள்ளப்படும்.

வருமானப் பற்றுச்சீட்டு என்பது விற்பனைகளிலிருந்து அல்லது ஏனைய வருமான விடயங்களிலிருந்து பெறத் தக்கதான தரகுகள், பெறத்தக்கதான வாடகைகள் போன்றவற்றைக் குறிப்பதாகும்.

## 3.5 பிற்போடப்பட்ட வருமானச் செலவுகள் (Deferred Revenue Expenditure)

பொதுவாக வருமானச் செலவுகள் ஒரு வருடத்துக்குட்பட்ட பயன்பாடுடையன சில வேளைகளில் பெருந்தொகையினதாகச் செய்யப்படும் வருமானச் செலவுகள் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குப் பகுதி பகுதியாக பதிவழிக்கப்படுமாயின் அத்தகைய வருமானச் செலவுகளே பிற்போட்ட வருமானச் செலவுகளாகும்.

உதாரணம்:

(1) நிறுவனங்களை ஆரம்பிக்கும்போது செய்யப்படும் பெருந்தொகை விளம்பரச் செலவுகள்.
(2 பெருந்தொகை திருத்த அல்லது பராமரிப்புச் செலவுகள்

## 3.6 தொடக்க பூர்வாங்க ஆரம்பச் செலவுகள் (Preliminary Expenses)

கம்பனியொன்று உருவாக்கப்படும்போது அகவிதிகள், புறவிதிகள் போன்ற ஆவணங்களைத் தயாரிப்பதற்கான செலவுகள், பதிவுக் கட்டணங்கள், முத்திரைக் கட்டணங்கள் போன்றதான செலவுகள் யாவும் தொடக்கச் செலவுகளாகும். இவை ஐந்தொகையில் கற்பனைச் சொத்துக்களாகப் பிரதிபலிக்கப்படும்.

## 3.7 தொழில்நுட்ப வகைமுறை அறிவுச் செலவு (Expenses on Technical Know how)

கம்பனிகள் தமது முகாமையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் முகாமை தொடர்பானதும் தொழில்நுட்பம் தொடர்பானதுமான பயிற்சிகளையும் விளக்கங்களையும் உள்நாட்டில் அல்லது வெளிநாடுகளில் வழங்குவதற்காக செய்யப்படும் செலவுகளான பிரயாண செலவுகள், மருத்துவ செலவுகள், உணவு தங்குமிட செலவுகள் யாவும் தொழில்நுட்ப வகைமுறையறிவுச் செலவுகளாகும். இவை அருவச் சொத்துகளாகக் காணப்படுகின்றன.

## 3.8 குறித்தல் கட்டணங்கள் அல்லது மறுத்தல் செலவுகள் (Noting Charges)

மாற்றுண்டியல் ஒன்று மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வுண்டியலைப் பெற்றுக் கொண்டவன் அவ் உண்டியலை பிரசித்த நொத்தாரிசு ஒருவரிடம் கொடுத்து உண்டியல் மறுக்கப்பட்ட விபரத்தை அவ்வுண்டியலில் குறிப்பிடுவதற்காக ஏற்படும் செலவுகள் குறித்தல் கட்டணம் எனப்படும்.

## 3.9 நேர்ச் செலவுகள்(Direct Expenses)

உற்பத்தியுடன் நேரடியாக இனங் காணப்படக் கூடியனவாகவும், உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்புக்கேற்ப அதே விகிதத்தில் அதிகரிப்பதுமான செலவுகள் நேர்ச் செலவுகளாகும்.

உ+ம் மூலப்பொருள், நேர்த் தொழிலாளர் கூலி

## 3.10 நேரில் செலவுகள் (Indirect Expenses)

உற்பத்தியுடன் நேரடியாக இனங் காணப்பட முடியாததும், உற்பத்தி அதிகரிப்புக்கேற்ப அதேவிகிதத்தில் அதிகரிக்காததுமான செலவுகள் நேரில் செலவுகளாகும்.

உ+ம் பராமரிப்புச் செலவுகள், கட்டடத் தேய்மானங்கள்

பயிற்சி வினா:-

பின்வரும் செலவினங்கள் ஒவ்வொன்றும் நேர்ச் செலவுகளா அல்லது நேரில் செலவுகளா எனக் குறிப்பிடுக:

| 1) முயற்சியின் தன்மை | செலவுகள் | வகை |
|---|---|---|
| பேக்கரி முயற்சி | 1) பேக்கரிகாரர் கூலிகள் | நேர் |
| | 2) கோதுமை மா | நேர் |
| | 3) கட்டடத் தேய்மானம் | நேரில் |
| | 4) கணக்குப் பதிவாளர் சம்பளம் | நேரில் |
| ஆடைத் தொகுதி | 5) பிடவை | நேர் |
| | 6) தையற் பொறி இயக்குநர் சம்பளங்கள் | நேர் |
| | 7) தொழிற்சாலை இறைகள் | நேரில் |
| | 8) மேற்பார்வையாளர் சம்பளங்கள் | நேரில் |

(1993 ஆகஸ்ட்)

## 3.11 ஆராய்ச்சி அபிவிருத்திச் செலவுகள் (Research and Development Expenses)

இலங்கைக் கணக்கியல் நியமம் 11இன் படி பின்வருவன ஆராய்ச்சி அபிவிருத்தி செலவுகளாகக் கருதப்படும்:
(i) ஆராய்ச்சி, அபிவிருத்தியில் ஈடுபடுவோரின் சம்பளங்கள், கூலிகள்
(ii) ஆராய்ச்சி, அபிவிருத்தியில் பயன்படுத்திய மூலப் பொருள்கள்
(iii) ஆராய்ச்சி, அபிவிருத்தியில் பயன்படுத்திய கட்டடங்கள், உபகரணங்களின் தேய்மானம்
(iv) இவை தொடர்பான மேந்தலைச் செலவுகள்

கணக்கியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்கள் கோட்பாடுகள் தொடர்பான வினாக்கள் தொடர்பாக எதிர்நோக்கும் சிரமங்களைக் கருத்திற் கொண்டே இக்கட்டுரைத் தொடர் அமைகின்றது.

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
26- 04- 1973

வீரச்சாவு
11- 06- 1993

# ஜனாதிபதி, பொதுத்தேர்தல் வருகிறது அபிவிருத்தியை துரிதப்படுத்துங்கள்

### அரச அதிகாரிகள் மத்தியில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

இந்த வருட முடிவில் ஜனாதிபதித்தேர்தல் நடைபெறவுள்ளது- அடுத்த வருட தொடக்கத்தில் பொதுத் தேர்தலை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக அமுல் செய்தல் அவசியமாகும் என சிறிலங்கா … வித்தார். இந்த மாநாட்டில் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உட்பட பல அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், அரசாங்கம் ஆரம்பித்துள்ள அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்த வேண்டும்.

எதிர்காலத்தில் நடைபெற … னும் ஆற்ற வேண்டும். பொதுத் தேர்தல் நெருங்கும் போது அரசாங்க சேவையில் அலட்சிய மனப்பான்மையும் உற்சாகமின்மையுமான போக்கு காணப்படுகிறது. இத்தகைய நிலைமை அரசாங்கத்துக்கு மட்டுமன்றி மக்களுக்கும் பாதகமானவை என்றார்.

அரசாங்கத்தைப் பற்றி தவ …

## நன்றி நவிலல்

அமரர் திரு.வேலுப்பிள்ளை சின்னத்தம்பி
அமரர் செல்வி சின்னத்தம்பி சிவதர்சினி
அமரர் செல்வி கணபதிப்பிள்ளை புஸ்பராணி

22-5-94 அன்று காலையில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சின்போது அகால மரணமடைந்த எமது சங்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி, அவர்தம் மகள் செல்வி சின்னத்தம்பி சிவதர்சினி, அவரது மருமகள் கணபதிப்பிள்ளை புஸ்பராணி ஆகியோரின் மரணச்செய்தியைக் கேள்வியுற்று, அன்னார்களது இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய அரச அதிகாரிகளுக்கும், அனைத்துக் கூட்டுறவாளர்களுக்கும், அமைப்பைச் சார்ந்தவர்களுக்கும், நீர்வேலி ப. நோ. கூ. சங்கப் பணிப்பாளர்கள், பணியாளர்கள், பொதுச்சபையினர் நன்றியுடையவர்களாகவுள்ளனர்.

மேலும் இவர்களது மரணச்சடங்கின்போது …

## கடற்புலி லெப். மகான்

(நவரட்ணம் தவராசா)

திதி: 6.6.94

உன் நினைவால் வாடும்

அப்பா, அம்மா,
சகோதரர்கள், மற்றும்
உறவினர்கள்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(8481)

## வடமாகாணத்தில் முதலிடம்



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் அமைப்பாளர்களுக்கிடையே (Organisers) வருடாந்தம் நடைபெறும் (Life new Business Competition) புதிய வியாபார ஆயுட் காப்புறுதி போட்டியில் **திரு. வி. விஜயமோகன்** 1992ஆம் ஆண்டில் முதல் இடத்தையும், 1993ஆம் ஆண்டிலும் முதல் இடத்தையும் இவரே பெற்றுக்கொண்டார். 1994ஆம் ஆண்டிலும் முன்னணியில் நிற்பவர் இவரே. அகில இலங்கை ரீதியில் 1993ஆம் ஆண்டு 2ஆவது இடத்தை பெற்றுக் கொண்டார்.

யாழ். பிராந்திய கூட்டுத்தாபனம் அகில இலங்கை ரீதியில் ஆயுட் காப்புறுதி புதிய வியாபார போட்டியில் முதல் இடத்தை வகிப்பதற்கு இவரே காரண கர்த்தா ஆவார்.

1993ஆம் ஆண்டு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட (Scholorship) புலமைப் பரிசில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு தமிழர் இவரே ஆவார்.

இவர் புலமைப்பரிசில் பெற்று இந்தியாவில் உள்ள பூனா (Pune) (IFSERT) என்ற காப்புறுதி கல்வி நிறுவனத்தில் (Life Insurance Marketing) ஆயுட்காப்புறுதி சந்தைப்படுத்தும் முறைபற்றி பயிற்சி பெற்று, அதற்குரிய சான்றுப்பத்திரமும் பெற்றுள்ளார்.


(8483)

அவசியமாகும் என சிறிலங்கா ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் அரசாங்க அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும் போது இவ்வாறு தெரி

எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும்ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் என்பனவற்றை முன்னிட்டு அரசாங்க ஊழியர்கள் தமது சேவையை மனப்பூர்வமாகவும் நியாயமாகவும், பொறுப்புணர்ச்சியுட

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



அச்சுவேலியில் அரசபடையோடு ஏற்பட்ட
நேரடி மோதலில் வீரச்சாவடைந்த

### லெப். க. நவநிதி (பவான்)

**தாயின் மடியில்** 23-04-1966 — **வீரமண்ணில்** 06-06-1987

கூலிப்படைகள் கூவென்றோடிட
குண்டுகள் தீர்த்த இளம்புலி நவநிதி
சீறிப்பாயும் சீற்றம் கொண்டுமே
மாற்றான் படையை சல்லடை போட்டனன்
ஊற்றாய் வீர உணர்வுகள் நிரம்பிய
மேஜர் அல்பேட்டின் சகோதரன் இவனோ
வேகம் குறையா வீறுகொள் வேங்கை
மோகத் தமிழில் தாகங் கொண்டவன்
பாவந் தேடும் பாதகப் படையினர்
மறைவினில் ஏவிய மாயக் குண்டினை
மார்பினில் ஏற்று மரபினைக் காத்த
தியாகியின் ஆத்மா சாந்தி கொண்டிடவே
ஈழம் மீட்கும் சக்தியாய் மாறுவோம்.

உன் பிரிவால் வாடும்,
பெற்றோர், சகோதரர்கள்,
அண்ணிமார், உறவினர்கள், நண்பர்கள்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (8482)

அரசாங்கத்தைப் பற்றி தவறான அறிக்கைகள் வேண்டுமென்றே வெகுசனத் தொடர்பு சாதனங்களில் வெளியிடப்படுவதைக் காணமுடியும். அவற்றை மறுக்க எவரும் முன் வருவதில்லை. உண்மையான தகவல்களை வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை அத்தகையநிலைமை ஏற்படாதிருக்க நடவடிக்கை வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

## கெயர் நிறுவனம் கடனுதவி

(தொல்புரம்)

பண்டத்தரிப்பு விவசாயிகளுக்கு உபஉணவு பயிர்ச்செய்கைக்காகசர்வதேச 'கெயர்' நிறுவனத்தினால் குறுகிய கால அடிப்படையில் விவசாயக் கடன் உதவி வழங்கப்படவுள்ளது.

1994 ஆண்டிற்கான உப உணவு பயிர்ச்செய்கைக்காக வழங்கப்படவுள்ள மேற்படி கடன் உதவி பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இந்த விவசாயிகளுக்கு 1 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா பெறுமதியான விவசாய உள்ளீடுகள் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும், உரம், கிருமி நாசினி, எரிபொருள் போன்ற அத்தியாவசிய விவசாய உள்ளீடுகளை உற்பத்தியாளரின் தேவைக்கேற்ப வழங்கப்படும் எனவும், இவற்றை பெறுவதற்கான விண்ணப்பங்கள் விவசாயிகளிடம் இருந்து தமக்கு கிடைத்து வருவதாகவும் மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. மா. புலேந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார் (41)

யுடையவர்களாகவுள்ளனர்.

மேலும் இவர்களது மரணச்சடங்கின்போது இரங்கலுரை நிகழ்த்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் மூலம் தம் அஞ்சலிகளைச் செலுத்தியவர்களுக்கும், மலர்வளையம், பூமாலைகள் சாத்தி கௌரவித்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

பணிப்பாளர்,
பணியாளர்,
பொதுச்சபையினர்.
நீர்வேலி ப. நோ. கூ. சங்கம்.

நீர்வேலி.
27-5-94

(சி-9604)

## தேவை

வீடியோ டெக், தொலைக்காட்சிப் பெட்டிகள், கசற்செற் மற்றும் எலெக்றோனிக் பொருட்கள் தேவை. நல்ல விலை கொடுத்து கொள்வனவு செய்யப்படும்.

தொடர்புகட்கு;

**மின்வளம்**
இல 8¹, லெப் கேணல் சந்தோசம் தெரு
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

(சி-9575)

## அறிவித்தல்

### வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி

கடந்த 22-05-94ஆம் திகதி நடைபெற்ற விமானத்தாக்குதலிற்கு இலக்காகி அகால மரணமடைந்த வலி- கிழக்கு தெ.ப.ப.நோ.கூ. சங்கத்தலைவர் திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பியின் மறைவினையொட்டி ஓர் அஞ்சலிக்கூட்டம் எதிர்வரும் 07-06-94ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2.30 மணிக்கு வலி- கிழக்கு தெ.ப.ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. குறித்த அஞ்சலிக் கூட்டத்திற்கு கூட்டுறவாளர்கள், ப. நோ. கூ. சங்க தலைவர்கள்| பொதுமுகாமையாளர்கள் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கொத்தணிகளின் தலைவர்கள்| பொது முகாமையாளர்கள், ஏனைய இரண்டாம்படி கூட்டுறவுச்சங்க சமாசங்கள், சிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள்,இச்சங்க அங்கத்தவர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள் அனைவரையும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்.

நீர்வேலி.
1994-06-04

(சி-9605)

### சிந்தனைக்கு

வாழ்வில் ஒரே ஒரு தோல்விதான் உள்ளது. தான் அறிந்தவற்றில் சிறந்தவற்றுக்கு உண்மையாக இராதது தான் அது.

- ப்ரெடரக் வில்லியம் பாரார்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 06 06.1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## எதிர்க்கட்சிகளின் கலக்கம் தெளிகிறது

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பெரும்பாலும் சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவர் சந்திரிகா குமாரணதுங்கா என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுவிட்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி வேட்பாளராகச் சந்திரிகா குமாரணதுங்கா நிற்பதையே மக்கள் விரும்புவார்கள் என்றால் தான் விட்டுக்கொடுக்கத் தயார் என சுதந்திரக்கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அறிவிப்பும் இதனை ஆதாரப்படுத்துவதாகவே உள்ளது.

ஜனாதிபதிப்பதவியை ஒரு தடவையேனும் வகித்துவிட வேண்டும் என்பதில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அண்மைக் காலம்வரை குறியாகவே இருந்தவர். இதற்காக பெரும் முயற்சிகளையும் எடுத்தவர். ஆனால் தற்பொழுது அப்பதவிக்கு போட்டியிடுவதில் இருந்து தான் விலகிக் கொள்வதற்கு அவர் சம்மதித்துள்ளமையானது, இன்றைய அரசியல் யதார்த்தத்தை ஓரளவிற்குச் சரியாக மதிப்பீடு செய்துள்ளார் என்றே கொள்ள முடியும்.

கடந்த வருடத்தில் கட்சிக் கூட்டத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி வேட்பாளர் எனத் தெரிவு செய்யப்பட்ட போது இருந்த அரசியற் சூழ்நிலையும், சிறிமாவோபண்டாரநாயக்காவின் உடல்நலமும் இன்று அவ்வாறு இல்லை. தென்மாகாணசபைத் தேர்தல் வெற்றியானது சந்திரிகா குமாரணதுங்காவின் செல்வாக்கை உயர்த்தியதோடு, ஐ.தே.கட்சிக்கு சவால் விடக் கூடிய தலைமையை சந்திரிகாவினாலேயே கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருந்தது. அத்தோடு மேதினப் பேரணியில் கட்சித் தொண்டர்கள் மத்தியில் சிறிமாவோ பண்டாரநாயக்காவை விட சந்திரிகாவின் செல்வாக்கு உயர்ந்திருந்தமை வெளிப்படையாகவே தெரிந்தது.

இருப்பினும், சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது அபிலாசைகளை உடன்கைவிடவில்லைஎன்றே

# இரத்ததானம் செய்ய விரும்பும் மனப்பான்மை குறைந்துள்ளது

## வைத்திய அதிகாரி கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையின் இரத்த வங்கி பெரும் வங்குரோத்து நிலையில் உள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் இரத்தமின்மையினால் பலர் கடும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடலாம். இது தவிர்க்கமுடியாத கட்டத்திற்கு வந்துள்ளது.

இவ்வாறு யாழ். போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிக்குப் பொறுப்பாகவிருக்கும் வைத்திய அதிகாரி திருமதி ராஜராஜேஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தாமாகவே மக்கள் முன்வந்து இரத்ததானத்தில் ஈடுபடும் மனப்பான்மை குறைந்துள்ளது. அவசர தேவைக்காக நாமே தான் இரத்தம் பெறத் தேடிச்செல்லவேண்டியுள்ளது.

இரத்ததானம் சம்பந்தமான அறிவு மக்களிடையே வளரவில்லை என்று கூறலாம் இரத்தம் வழங்குவதால் எந்த மனிதனும் பாதிப்படைவதில்லை. எவரிடமிருந்துஇரத்தத்தைப் பெறலாம் என்பதை நாம் சோதனை செய்தபின்னரே தீர்மானிக்கிறோம். ஆனால் இன்னும் மக்களில் பலர் இதன் அறிவு போதாமல் வீண் பயம்கொள்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கும் போது, ஒரு குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு இரத்தம் தேவை. இரத்தம் ஏற்றாவிடில் அவர் உயிருக்கு ஆபத்து நேரலாம் என்ற நிலை உள்ள வேளையிலும் கூட அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த இன்னொருவர் இரத்தம் கொடுக்க முன்வருவதில்லை.

தந்தைக்கு ஆபத்து என்றால் மகன் இரத்தம்கொடுக்கத் தயாராக இருப்பதில்லை வேறொருவரின் உதவியை நாடுபவர்களாகப் பலர் உள்ளனர்.

பணத்திற்காக இரத்தம் வழங்கும் நபர்களைச் சந்தித்து இரத்தவங்கிக்கு அழைத்து வருகின்றார்கள். வருவோர் சரியாகப் பேசுவார் என்றோ உண்மையைச் சொல்வார் என்றோ எதிர்பார்க்கமுடியாது. இதனால் நோய்க்கிருமிகள் உள்ள இரத்தத்தைப்பெறவேண்டியநிலையும் ஏற்படலாம்.

சாதாரண சூழலில் நாள் ஒன்றிற்கு இருபது பைந்து இரத்தம் யாழ் போதனா மருத்துவமனைக்குத் தேவையாக உள்ளது. இந்த நிலையில் நாமாகவே இரத்தம் பெறச்செல்லவேண்டிய நிலை உள்ளது.

அகதி முகாம்களில் உள்ளவர்களில் பலர் இரத்ததானம் செய்ய மகிழ்வுடன் வருகின்றார்கள். அவர்களின் சிந்தனையைப் பாராட்டவேண்டும். ஆனால் அவர்களில் தகுந்த போஷாக்கு இல்லாத காரணத்தினால் இரத்தம் பெறப்படுவது தடைப்படுகிறது. இது அனுதாபத்திற்குரியதாகிறது.

இரத்த தானம் செய்ய விரும்புவோர்களின் உடலில் இரத்தம் போதாமல் இருப்பது கவலையளிக்கிறது என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது, அவசர காலத்தில் யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்களின் பங்களிப்பு அளப்பெரியது. இந்தக்காலத்தில் பெருமளவிலான இரத்தத்தைப் பாடசாலை மாணவர்களே தானம்செய்கின்றனர். இது விஷயத்தில் பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இரத்தம் வழங்க முன்வரும் பலரிடையே தொற்றுநோய்க் கிருமிகள் உள்ளன. இந்த விடயத்தில் நாம் அவதானமாக இருந்து சோதனைக்குப் பின்னரே இரத்தத்தைப் பெறுகின்றோம். மலேரியா, நெருப்புக் காய்ச்சல்களால் பாதிப்படைந்தவர்களது இரத்தம் குறிப்பிட்ட சில வருடங்களுக்கு இன்னொருவருக்குப் புகுத்த முடியாது.

யாழ். மாவட்டத்தில் இவ்வாறான நோய்களினால் பலர் பாதிப்படைந்திருப்பது அறிந்ததே என்று குறிப்பிட்டார்.

தென்பகுதிகளிலும், வெளிநாடுகளிலும் இரத்த வங்கியின் பாவனைக்காக புதிய தொழில் நுட்பங்கள் பொருந்திய உபகரணங்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. யாழ். மருத்துவ மனையில் நிரந்தரமான மின்சாரம் இல்லாததாலும் வேறு தொழில் ரீதியான குறைபாடு காரணமாகவும் இந்த உபகரணங்களை எடுத்து வந்து செயற்படுத்த முடியாத நிலை உள்ளது. செயற்பாடுகளில் சிறிய தாமதமோ, மின் விநியோகத்தில் தாமதமோ இருக்கும் பட்சத்தில் அத்தனை உபகரணங்களும்பழுதடையக் கூடிய சாத்தியம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் காலகட்டத்தில் இரத்த வங்கியின் பயன்பாடு பெரிதும் தேவையான ஒன்று தொடர்ந்தும் இதே நிலை நீடிக்குமாயின் பொதுமக்கள் பலர் பெரியளவில் பாதிக்கப்படலாம் இந்தச் சமூகத் தேவையை அனைவரும் உணரவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

(தி. க, பா)

## விவசாய விருத்திக்கு ஆராய்ச்சி

விவசாயப் பயிர்களின் நல்லின வர்க்கங்களைத் தேர்வு செய்தல் மற்றும் தேர்வு செய்த இவ் வர்க்கங்களின் தூய்மையைப் பேணுதல், இவற்றைப் பயிரிடுவதற்கான செய்கை முறையைக் கண்டறிதல், நடைமுறைப் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காணுதல் என்பன போன்றவற்றைக் கருத்திற் கொண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பரந்தன், திருநெல்வேலி, முருங்கன் பகுதிகளிலுள்ள விவசாய ஆராய்ச்சி மையங்களில் ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றது.

## பிடிபட்டனர்

(தென்மராட்சி)

கொடிகாமம் தவசிகுளம் என்னும் இடத்தில் ஒரு வீட்டில் பட்டப்பகலில் 25,000/- பெறுமதி வாய்ந்த நகைகள் கொள்ளையடித்தவர் ஒருவர் சாவகச்சேரி காவல் துறையினரிடம் வசமாக மாட்டினார்.

கடந்த 16ஆம் திகதியன்று தவசிகுளப் பகுதியில் வசிக்கும் ஞானப்பிரகாசம் அரிய மலர் என்பவரது வீட்டில் வீட்டில் ஒருவரும் இல்லாத நேரம் வீட்டில் உட்புகுந்து இக்களவை நடத்தியுள்ளார். சந்தேக நபரை காவற்துறையினர் விசாரித்த போது நகை எடுத்தவர் தனது வீட்டு தென்னம் வட்டுக்குள் மறைத்து வைத்திருந்ததை காவற்றுறையினர் பிடித்துள்ளனர். இவரிடமிருந்து நகைகள் பெறப்பட்டன. இவர் தற்போது காவற்துறையினரின் பாதுகாப்பில் உள்ளார்.

(86)

## காணிகள் வழங்கப்பட்டது

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 130 குடும்பங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் காணிகளைப் பங்கீட்டு அடிப்படையில் வழங்கியுள்ளது.

முத்தையன்கட்டுத் திட்டத்தின் கீழ் செய்கை பண்ணப்படாமல் இருந்த தரிசுக் காணிகள் பலவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால பயனாளிகளுக்கு தலா அரை ஏக்கர் வீதம் பகிரப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

## பிருதிவி ஏவுகணை இராணுவரீதியாக சோதனை

(டில்லி)

இந்திய விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட குறுகிய தூர ஏவுகணையான பிருதிவி நேற்று முன்தினம் இராணுவ ரீதியில் பரிசோதிக்கப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அது துல்லியமாகத் தாக்கி சேதப்படுத்தியதால் இச் சோதனை வெற்றியைப் பெற்றுள்ளது.

ஒரிசா மாநிலத்தில் சாந்திப்பூர் கடற்தளத்திலிருந்து பிருதிவி ஏவுகணை நேற்று முன்தினம் காலையில் செலுத்தப்பட்டது. 75 மைல் கடலுக்குள்ளிருந்த தீவில் அமைக்கப்பட்டிருந்த இலக்கை அது

தினர் இதனைச் சோதனையிட்டிருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## நிதியமைச்சர் சென்னை விஜயம்

(டில்லி)

இந்திய நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன்சிங் ஒரு நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு இன்று சென்னைக்கு வரவுள்ளார். சென்னையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை மாநில அரசின் தலைமைச் செயலகத்தில் சந்திக்கவுள்ள அவர் பின்னர்

## நெடுங்கேணி கோட்டத்தில் ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு

(நெடுங்கேணி)

நெடுங்கேணி கல்விக்கோட்டத்தில் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும், இதனால் இக் கோட்டத்திலுள்ள இரண்டு பாடசாலைகள் மூடப்பட்டு விட்டதாகவும் தெரிய வருகிறது. இக் கோட்டத்தில் 40 பாடசாலைகள் இருக்கின்றபோதும் தராதரம் பெற்ற அதிபர்கள் 18 பேரே கடமையில் இருப்பதாகவும், 279 ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற போதும் 149 ஆசிரியர்களே சேவையாற்றுவதாகவும் மேலும் தெரியவருகின்றது.

அத்துடன் ஆண்டு 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட பல பாடசாலைகளில் ஒரு ஆசிரியர் மட்டுமே கடமையாற்றுவதாகவும், கூறப்படுகிறது. கடந்த ஆண்டில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க எடுக்கப்பட்ட முயற்சியும் கூட கைவிடப்பட்டு விட்டதாகவும் தெரிய வருகிறது.

## அழுக்கணவன்தாக்குதலால்

## திருட்டுப்பொருள் மீட்கப்பட்டது

(தென்மராட்சி)

டையாகவே தெரிந்தது.

இருப்பினும், சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது அபிலாசைகளை உடன்கைவிடவில்லைஎன்றே கூறலாம். இதன் காரணமாகவே கடந்தமாதம் இடம்பெற்ற கட்சியின் செயற்குழு கூட்டத்திலும் சிறிமாவோ ஜனாதிபதி வேட்பாளராக நியமனம் செய்யப்பட்டார். ஆனால் தற்பொழுது சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது நிலைப்பாட்டை மாற்றியுள்ளார் என் உணர முடிகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் தான் போட்டியிட்டால் எதிரணியின் வெற்றிவாய்ப்பு பிரகாசமானதாக இல்லை என்பதை சிறிமாவோ உணர்ந்து கொண்டுள்ளமை மட்டும் தெளிவாக உள்ளது

சிறிமாவோ பண்டாரநாயக்கா இம்முடிவிற்கு வருவதற்கு தமது கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் மததியில் சந்திரிகாவிற்குப் பலமான ஆதரவு இருப்பதை அவர் புரிந்துகொண்டமை காரணமாக இருக்கலாம். அல்லது தனது உடல் நலக் குறைவினால் ஏற்பட்ட இயலாமையோ அன்றி இன்றைய அரசியல் பொருளாதார நிலைகளுக்கு ஏற்ப தன்னை விரைவில் இசைவாக்கம் செய்ய முடியாமையோ இருந்திருக்கலாம்.

ஆனால் எது எவ்வாறு இருப்பினும் சிறிமாவோ எதிர்த்தரப்பில் தேர்தலில போட்டியிடுவதைவிட சந்திரிகா போட்டியிடுவதினால் எதிரணியினருக்கு வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது என்றே கூறமுடியும். ஏனெனில சிறிமாவோவின் கடந்த ஆட்சிக்காலத்தை சிங்கள மக்கள் இன்னும் மறக்கவில்லை.ஐ.தே.கட்சியும் அதையே அடிக்கடி நினைவுபடுத்தி வருகின்றது. இதில் உணவுப் பொருள்களுக்கு மக்கள் நீண்ட வரிசையில் நின்றுபட்ட அவஸ்தையும், ஜே.வி.பி. படுகொலைகளும் கறைபடிந்தவையாகும்.

இந்தவகையில் கடந்தகால அரசியற்தவறுகள், குற்றச்சாட்டுகள் பெருமளவில் அற்ற, அதேவேளை தற்போதைய அரசியற் பொருளாதார சூழ்நிலைக்கு ஈடுகொடுக்கக் கூடிய சந்திரிகா குமாரணதுங்காவை ஜனாதிபதித் தேர்தலில்போட்டியிடவைப்பது எதிர்க்கட்சிகளைப்பொறுத்துலாபகரமான தொன்றே. ஆகையினால் சிறிமாவோவின் விட்டுக் கொடுப்பிற்கு எது காரணமாக இருப்பினும் அவரின் முடிவு எதிர்க்கட்சிகள் தரபபில் வரவேற்கப்படக் கூடியதே. இது எதிர்க்கட்சித் தொண்டர்களின் கலக்கத்தை நீக்கப் போதுமானதும் ஆகும்.

---

பிருதிவி ஏவுகணை நேற்று முன்தினம் காலையில் செலுத்தப்பட்டது. 75 மைல் கடலுக்குள்ளிருந்த தீவில் அமைக்கப்பட்டிருந்த இலக்கை அது தாக்கிச் சேதப்படுத்தியது. 150 முதல் 250 கிலோமீற்றர் தொலைவுவரை தரையிலிருந்து தரைக்கு ஏவப்படுவதற்கான சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் கூறியுள்ளது. பிருதிவி ஏவுகணை ஏற்கனவே பன்னிரண்டு முறை சோதிக்கப்பட்டபோதும் இராணுவத்

யில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை மாநில அரசின் தலைமைச் செயலகத்தில் சந்திக்கவுள்ள அவர் பின்னர் மாநில அரசின் அதிகாரிகளையும், வருவாய்த்துறை மற்றும் நிதித்துறை அதிகாரிகளையும், வங்கி மேலாளர்களையும், முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமனையும் சந்தித்துப் பேசவுள்ளார். சென்னையில் செய்தியாளர் மாநாடு ஒன்றையும்அவர் நடாத்தவுள்ளார்.

# அன்புடன் கேட்கப்பட்டால் பதவி விலகத் தயார்

## - தலைமைத் தேர்தல் ஆணையாளர்

தேச நலனுக்கு உகந்தது என்றால் பதவி விலகத்தயார் என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவிடம் தெரிவித்திருப்பதாக இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் கூறியுள்ளார்.

பம்பாயிலிருந்து வெளியாகும் பிளிட்ஸ் பத்திரிகைக்கு பேட்டிஅளித்த அவர் மேலும் கூறுகையில், பதவி விலகும்படி அன்புடன் கேட்டுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். எனினும் நிர்ப்பந்தத்தால் பதவி விலக்க முயன்றாலோ மிரட்டிப் பதவியை பறிக்க நினைத்தாலோ தாம் அதற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

ஆளுநர் பதவி அல்லது தூதுவர் பதவிதர அரசு முன்வந்தது. ஆனால் நான் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. தலைமைத்தேர்தல் ஆணையாளரை அரசாங்கம் நினைத்தபடி பந்தாட முடியாது என்பதால் தாம் வேறு எந்தப் பதவியையும் ஏற்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

# லெபனான் எல்லையில் இஸ்ரேல் குண்டுவீச்சு

(டெல் அவிவ்)

லெபனானின் எல்லைப் பகுதியில் இஸ்ரேலிய விமானங்கள் குண்டு வீச்சு தாக்குதல்களை நடாத்தியுள்ளன. இக் குண்டுவீச்சினால் லெபனானின் எல்லைப்புறத்திலிருந்து பாலத்தீனியப் போராளிகளின் முகாம்கள் பலநாசமாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது இத் தாக்குதலினால் 26பேர் வரை கொல்லப்பட்டிருப்பதோடு . மேலும் பலர் காயமடைந்தனர். இதே வேளை போராளிகள் நடத்திய பதில் தாக்குதலால் இஸ்ரேல் ஆத்திரமடைந்து இருப்பதாகவும், வான் வழி குண்டு வீச்சுக்கள் மேலும் தொடரலாம் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது

அத்துடன் லெபனான் எல்லையை நோக்கி இஸ்ரேலிய படையினரின் டாங்கிகள் நகர்த்தப்பட்டிருப்பதாகவும் படையினர் குவிக்கப்பட்டு வருவதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

கவும் மேலும் தெரியவருகின்

தெரிய வருகிறது.

# அழுக்கணவன்தாக்குதலால் மரவள்ளிகள் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் மரவள்ளியைத் தாக்கும் அழுக்கணவன் நோயின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மரவள்ளிப் பயிர்ச்செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக தெரிய வருகின்றது.

மரவள்ளியின் தண்டுச்சாறை உறிஞ்சியெடுத்த பின்னர், மரவள்ளி காற்றினால் சரிந்து, முறிந்து விழுகின்றது.

இந்தமுறை யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மரவள்ளி அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அழுக்கணவன் பூச்சிகள் மரவள்ளித் தண்டில் அடர்த்தியாக மொய்த்துக் கொண்டு மாவள்ளியின் வளர்ச்சிக்கு கெடுதியாக உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

---

# அணு ஆயுத சாதனங்களை வடகொரியாமறைத்துள்ளது

அணு ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டதா என்பதைக் கண்டறியக்கூடிய தடயங்களை வடகொரியாசாமர்த்தியமாக மறைத்து விட்டிருப்பதாக சர்வதேச அணுசக்தி கமிஷனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து வடகொரியா மீது ஐ. நா. மூலம் பொருளாதாரத் தடைவிதிப்பது தொடர்பாக அமெரிக்கா ஆராய்ந்து வருகின்றது இதன் ஒரு கட்டமாகஜப்பான் தென் கொரியா ஆகியவற்றுடன் அமெரிக்கா வாஷிங்டனில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

# சீன விஜயத்தை கைவிட்டு திரும்பினார் கமலஹாசன்

(பீகிங்)

சீனாவில்நடைபெற்றுவரும் இந்திய திரைப்பட விழாவில் பங்கேற்கச் சென்ற நடிகர் கமலஹாசன் தமது பயணத்தை இடைநடுவில் ரத்துச் செய்து விட்டுத் திரும்பி விட்டார்

மத்திய அரசு அதிகாரிகளின் அலட்சியப்போக்கினால் அதிருப்தியுற்ற தாலேயே கமலஹாசன் பயணத்தைரத்துச் செய்ததாகஅவருக்கு நெருக்கமானவர்கள் கூறியுள்ளனர்

# சிசு பரிசோதனைக்கு ராஜஸ்தானில் தடைவிதிப்பு

(வைசாலி)

தாயின் கருவில் இருக்கும் சிசு ஆணா? பெண்ணா? என்பதைக் கண்டறிய பரிசோதனை நடாத்தப்படுவதற்கு ராஜஸ்தான் அரசு தடைவிதித்துள்ளதுபெண் குழந்தைகளை கருவிலேயே அழித்து விடும் சம்பவங்கள் அதிகரித்து வருவதைத்தொடர்ந்தே இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

---

# திருட்டுப்பொருள் மீட்கப்பட்டது

(தென்மராட்சி)

தென்மராட்சி கச்சாய் என்னும் இடத்தில் ஓர்வீட்டினுள் இரவு வேளை உட்புகுந்த இருவர் வீட்டினுள் இருந்த 35,000/-ரூபாபெறுமதியான நகையினை எடுத்துள்ளனர்.

கச்சாய் பாலாவி என்னும் இடத்தில் வசித்து வரும் கோணேஸ்வரன்- ஜெயசோதி என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. கடந்த மாதம் 28ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் சாவகச்சேரி காவல் துறையினரின் விடாமுயற்சியால் சந்தேக நபர் ஒருவரை விளக்கத்திற்கு உட்படுத்திய போது இச்சந்தேக நபரும் மற்றையவரும் வசமாகமாட்டிக்கொண்டனர். இரு சந்தேகநபர்களையும் விசாரித்த போது களவு பிடிபட்டது.

இருவரிடமும் இருந்து ஒரு தொகுதி நகைகள் மீட்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி காவல்துறை பொறுப்பாளர் தெரிவித்தார். இருவரும் தற்போது காவல்துறையினரின் பாதுகாப்பில் உள்ளனர் (86)

# கண்நோய் பரவுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கண்நோய் மிக வேகமாகப்பரவி வருவதாக மருந்துவதுறை சார்ந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த நோய்காரணமாக மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்களது எண்ணிக்கை சற்று அதிகமாக உள்ளதாக மருத்துவ அறிக்கைகளை ஆதாரம் காட்டி தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் பரவியிருக்கும் இந்த கண்நோயின் தாக்கம் யாழ். போதனா மருத்துவ மனையின் ஊழியர்களையும் விட்டுவைக்கவில்லை. இவ் வைத்திய சாலையின் பல ஊழியர்கள் இந்தநோய் காரணமாக விடுப்பு எடுத்துக் கொண்டு வீடுகளில் முடங்கியுள்ளதாக தெரியவருகிறது.

# கொழும்பு துறைமுக வேலைநிறுத்தம் முடிவு

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் நேற்று தமது வேலை நிறுத்தத்தை கைவிட்டு பணிக்கு திரும்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன் தினம் இவ் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டதை தொடர்ந்து கொழும்பு துறைமுகம் ஸ்தம்பிதமடைந்தது குறிப்பிடத்தக்கது. சில தினங்களுக்கு முன் துறைமுகத்தில் பணியில் இருந்த ஊழியர் ஒருவர் காயமடைந்ததாகவும் இவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல அதிகாரிகள் தாமதித்ததாகவும் இதனையடுத்தே ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ள அமைச்சு இணங்கியதையடுத்து ஊழியர்கள் நேற்று பணிக்குத் திரும்பினர். துறைமுககப்பல் போக்குவரத்து அமைச்சின் செயலர் அன்ரன் அல்பிரட் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

## மரண அறிவித்தல்கள்



திருமதி
**ஞானலஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி B .A**

[ஆசிரியை யா|நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை]

குப்பிழானைச் சேர்ந்த திருமதி ஞானலஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (03-06-94) சிவபதம் அடைந்துள்ளார். இவர் திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியின் (விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை) அன்பு மனைவியும் காலம் சென்ற சைவபூஷணம் திரு. க. நல்லையா (மலாயன் பென்சனர்) திருமதி ந. கனகாம்பிகை ஆகியோரின் அன்புப் புதல்வியும், இணுவில் திரு. க. ஆறுமுகம், திருமதி சரஸ்வதி ஆறுமுகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்பு மருமகளும், திருமதி சி. சிவகங்காவின் (கனடா) அன்பு அக்காவும், திரு. வை. சிவசுப்பிரமணியம் (பொறியியலாளர்-கனடா), திரு. ஆ. குகமூர்த்தி (ஆசிரியர் யாழ். பல் தொழில்நுட்பக் கல்லூரி), திரு. ஆறு திருமுகன் (ஆசிரியர், யா|ஸ்கந்தவரோதயா கல்லூரி), திருமதி வி. குககுமாரி (ஆசிரியர் யா|இராமநாதன் கல்லூரி), திருமதி இ. கோணேஸ்வரி (ஆசிரியர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி), திருமதி ந. விக்கினேஸ்வரி (ஆசிரியர், யா|இராமநாதன் கல்லூரி), செல்வி ஆ. கேதீஸ்வரி (யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கலைப்பீட மாணவி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் திரு. மு. விஜயரகுநாதன் (கணக்காளர், பிரதேச செயலகம், கோப்பாய்), திருமதி சசிகலா குகமூர்த்தி (ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி), திரு. ஆ. இராமசந்திரன் (சேவைக்கால ஆலோசகர் உடுவில்), திரு. இ. நரேந்திரா (ஆசிரியர் யா|உரும்

### தமிழீழ

பட்டது பின்னர் கோட்டக் கொடிகள் ஏற்றப்பட்டன.

இதைத் தொடர்ந்து மாணவர்கள் சார்பிலும், ஆசிரியர்கள் சார்பிலும் எழுச்சி உரைகள் நிகழ்த்தப்பட்டன. அத்துடன் எழுச்சிநாள் அறிக்கையும் வாசிக்கப்பட்டது. இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினராக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. இன்பன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

சங்கானை கல்விக் கோட்டத்தினரின் ''மாணவர் எழுச்சி நாள்'' நிகழ்வுகள் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பிரதான மண்டபத்தில் சங்கானைக் கல்விக் கோட்டப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் தலைமையில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

விழாவிற்கு வருகை தந்திருந்த விருந்தினர்கள், பிரமுகர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் அனைவரும் பாண்ட் வாத்திய சகிதம் மண்டப வாயிலிற்கு அழைத்து வரப்பட்டு அங்கு வைத்து தமிழீழ தேசியக் கொடியை சங்கானை வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் மதி அவர்கள் ஏற்றி வைத்தார். கோட்டக் கொடியை விழாவின் பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த வலயம் 2 இன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளை ஏற்றி வைத்தார்.

மௌன வணக்கத்தினைத் தொடர்ந்துவிக்ரோறியாக்கல்லூரி மாணவர்களால் மாணவர்எழுச்சிக் கீதம் இசைக்கப்பட்டது. சங்கானை கல்விக் கோட்ட மாணவர் அமைப்பின் மகளிர் பொறுப்பாளர் செல்வி வலம்புரி அவர்கள் மாணவர் எழுச்சி நாள் அறிக்

# பொன்னும் பொருளும் பெண்ணின் வாழ்வைச் சிதைப்பதா?

### பொதுஜன

முனையில் இன்று பல பிரிவுகள் இருந்தபோதும் அதன் உண்மையான உரித்தாளியார் என்பது தெளிவாக கூறமுடியாது. எனவே ஜனதா விமுக்தி பெரமுனை என்பது இந்த நாட்டு இளைஞர்களின் அமைப்பு இதன் உரிமையாளர் தனது கொள்கைக்காக உயிரைத் தியாகம் செய்தவர்கள் மட்டுமே என மேலும் கூறினார் அவர்களின் கொள்கையை முன்னெடுத்து செல்ல யார் முன்வருகின்றார்களோ அவர்களுக்கு மட்டுமே ஜனதா விமுக்தி பெரமுனையில் உரிமையுண்டு என்றார்.

---

சிறப்பாக நடைபெற்றன. மாணவர் எழுச்சி நாள் கோட்ட ரீதியாக பிற்பகல் 2-30 மணிக்கு ஆரம்பமானது.

பருத்தித்துறை கோட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்றது. துறைமுகத்திலிருந்து பருத்தித்துறை பெண்கள் உயர்தரக் கல்லூரி வரை மேளதாளவாத்தியங்களுடன் ஊர்வலம் சென்று மேற்படி கல்லூரியில் நிகழ்வு ஆரம்பமானது. வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. செல்வம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கரவெட்டிக் கோட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. சிவராசா தலைமையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் எழுச்சி நாள் நடைபெற்றது. பிரதம விருந்தினராக திரு. த. கலாமணி (கல்வியியற்துறை விரிவுரையாளர்) கலந்து கொண்டார். இக்கோட்ட ஊர்வலம் நெல்லியடி சந்தியில் இருந்து மத்திய மகாவித்தியாலயத்தைச் சென்றடைந்தது.

மருதங்கேணி கோட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வை. செல்வராசா தலைமையில்செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் எழுச்சிநாள் நடைபெற்றது. செம்பியன் பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலையிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகியது.

கோட்டங்கள் ரீதியாக

### தியாகி சிவகுமாரன்

அணிவித்தனர். தொடர்ந்து சிவகுமாரனின் சிலைக்கு போராளிகளும், பொதுமக்களும் இணைந்து மலரஞ்சலி செலுத்தினர்.

இறுதியாக மாலை 7.30 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழவள், கடற்புலிகள் அரசியல் பயிற்சி பொறுப்பாளர் திரு. வாஞ்சிநாதன், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி தமிழ்க்கவி, விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோர் உரையாற்றினர்.

---

### போசாக்கு

அமெரிக்க மிசன் பாடசாலையிலும், 8ஆம் திகதி புதன் பிற்பகல் 1.00 மணிக்கு சித்தன்கேணி கணேச வித்தியாசாலையிலும், இதே தினம் 2.00 மணிக்கு அராலி இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதென வலிமேற்கு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா அவர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(41)

---

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தின் எழுச்சி நாள் நிகழ்வுகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. புஸ்பாகணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பான்ட் வாத்திய இசையுடன்மாணவர் அணிவகுப்புடன்நிகழ்வுகள்ஆரம்பமாகின பின்னர் தமிழீழத் தேசியக் கொடியும் கோட்டக் கொடியும்ஏற்றி வைக்கப்பட்டது.

பின்னர் 5வெண்புறாக்கள் வானில் பறக்கவிடப்பட்டது. பின்னர்சிறப்புரைகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட மாணவர் எழுச்சி நாள் வைபவங்கள் மானிப்பாய்மகளிர் கல்லூரியிலும்,

### இன்று

என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. ஆகவே நாங்கள் உங்களை எதிர்கால நாட்டினுடைய இளம் தலைவர்களாக இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக-முள்ளந்தண்டாகதான் பார்க்கின்றோம். அதற்கு உதாரணமாக இருந்தவர்கள்தான் எமது மதிப்புக்குரிய தலைவர் பிரபாகரன் அவர்களும் எமது மதிப்புக்குரிய தியாகி பொன் சிவகுமாரன் அவர்களும்.

படிக்க வேண்டியவர்கள் தமது வாழ்க்கையை வளமாக்க வேண்டியவர்கள் இம் மண்ணுக்காக உள்ளம் குமுறி ஏன் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்பதை சிந்தித்துப்பார்க் வேண்டும் என்றார்.


**யாழ். ஸ்ரீதரில்**

புரூஸ்லி நடித்த
**GAME OF DEATH**

தினசரி
பிற்பகல் 4.00மணி 6.00மணி
சனி, ஞாயிறு
காலை 10. 30 மணி
பிற்பகல் 4.00 மணி 6.00மணி

(சி- 9570)


### தடுப்பூசி

வளர்ப்பு நாய்களுக்கு விசர் நாய் நோய் தடுப்பூசி மருந்தேற்றல் திட்டத்தின் கீழ் இன்று யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் பின்வரும் இடங்களில் விசர் நாய் நோய் தடுப்பூசிகள் போடப்படவுள்ளன. காலை 8-00 மணி முதல் 10-00 மணிவரை மாநகராட்சி மன்றம் நல்லூர் சட்டநாதர் ச. ச. நிலையம், பருத்தித்துறை வீதி, முற்பகல் 10-30 மணி தொடக்கம் 12-30 மணி வரை அரியாலை கலைமகள் ச. ச. நிலையம், அரியாலை திருமகள் ச. ச. நிலையம் பிற்பகல் 2-00 மணி தொடக்கம் 4-00 மணிவரை செம்மணி வீதி பாரதி ச. ச. நிலையம் நல்லூர் தெற்கு ச. ச நிலையம்-

### திருக்கோவில்

தொழிலில் ஈடுபடுவோரும், கால்நடை வளர்ப்போரும் காடுகளுக்கு செல்லக்கூடாது என்று அதிரடிப்படையினர் பணிப்புரை விடுத்துள்ளனர்.

### புகைப்பிடிக்கும்

என இந்த ஸ்தாபனம் எச்சரித்துள்ளது. புகைப் பிடிப்பவர்களில்ஏழுலட்சம்பேர் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைச்சேர்ந்தவர்களாவர். கனடா, சுவீடன்போன்ற நாடுகளில் புகைத்தல்பற்றிய பிரசாரங்களை மேற்கொண்டதால் நல்ல பெறுபேறுகள் கிடைத்துள்ளதாக இந்த ஸ்தாபனம் கூறுகிறது. புகைப் பிடிப்பதால் ஒருவர் தனது வாழ்நாளில் 22 வருடங்களை இழக்கிறார் எனவும் உலக சுகாதாரஸ்தாபனம்கூறுகிறது

## கண்ணீர் அஞ்சலி

திருமதி
**ஞானலஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களது அன்புத் துணைவியார் திருமதி ஞானலஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (ஆசிரியர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) அவர்களது மறைவினை அறிந்து ஆழ்ந்த துயரமடைகிறோம். ஈடுசெய்ய முடியாத இழப்பினால் துயருறும் எமது அன்பு விரிவுரையாளருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு: ஆசிரிய மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்வர்.

- மாணவர் மன்றம்.

(8490)

மூர்த்தி (ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி), திரு. ஆ. இராமசந்திரன் (சேவைக்கால ஆலோசகர் உடுவில்), திரு. இ. நரேந்திரா (ஆசிரியர் யா|உரும்பிராய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சி. வலந்துஜா, சி. சிந்துஜா, சி. சாருஜா (கனடா), கு. தாயினி கு. விசாரதன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், வி. லாவண்யா, வி. ஸ்ரீவிசாகன், வி. ஸ்ரீவித்தகன், இ. கேதுசா, ந. உசேனி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை இன்று (06-06-94) பிற்பகல் 3 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

அம்பாள் அகம்,
மருதனார் மடம்,
இணுவில்.

ஆ ஸ்ரீஸ்கந்த மூர்த்தி,
[கணவன்]

(சி-9608)

## சிவப்பிரகாசம் மணாளன் (பாபு)

(Toronto English Convent, Canada)

பெரியரசடி, சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வன் சிவப்பிரகாசம் மணாளன் அவர்கள் 02-06-1994 அன்று கனடாவில் அகால மரணமானார்.

இவர் சிவப்பிரகாசம் (Nursing Adviser, Toronto Hospital), சோதீஸ்வரி (Nurse, Toronto Hospital) ஆகியோரின் அன்பு மகனும், உதயப்பிரசாந்தி (University College, Canada) உதயபாரதி (English convent, Canada) ஆகியோரின் அருமைச் சகோதரனும், திருமதி சி. செல்லம்மாவின் அன்பு பேரனும், திரு, திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற மின்நுட்பவியலாளர்), திரு. மகேஸ்வரன் (M. L. T. London), திரு. சச்சிதானந்தன் (மின் பொருத்துனர்) ஆகியோரின் அருமைமிகு பெறாமகனும், திருமதி மனோன்மணியின் ஆசை மருமகனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

''உதயதீபம்''
பெரியரசடி, சாவகச்சேரி.

சி. திருநாவுக்கரசு,
(பெரிய தந்தை)

(சி-9607)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பின் மகளிர் பொறுப்பாளர் செல்வி வலம்புரி அவர்கள் மாணவர் எழுச்சி நாள் அறிக்கையினை வாசித்தார்.

வட்டு திருஞானசம்பந்த வித்தியாசாலை அதிபர் திரு. வி. சிவஞானபோதன், உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் உட்பட விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள் பலர் சிறப்புரையாற்றினர்.

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி கல்விக் கோட்டங்களில் இந்நிகழ்வு வெகு பாடசாலையிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகியது.

கோட்டங்கள் ரீதியாக நடைபெற்ற மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகளின்போது மங்கள விளக்கேற்றல், தேசியக் கொடியேற்றல், பாடசாலைக் கொடியேற்றல், மாணவர் எழுச்சிப் பாடல்கள், மாணவர் எழுச்சி நாள் அறிக்கை வாசித்தல், பரிசில்கள் வழங்கல், தலைமையுரை, சிறப்புரை, பிரதம விருந்தினர்கள் உரைகள் என்பன இடம் பெற்றன.

கோட்ட மாணவர் எழுச்சி நாள் வைபவங்கள் மானிப்பாய்மகளிர் கல்லூரியிலும், தெல்லிப்பழை கல்விக் கோட்டம், கோப்பாய் கல்விக் கோட்டம் என்பவற்றின் நிகழ்வுகள் முறையே மகாஜனாக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் நடைபெற்றன.

ஒவ்வொரு கோட்டநிகழ்வுகளின்போதும் மாணவர்களுக்குரியபரிசளிப்புவைபவங்களும் நடைபெற்றன. (க, பா, 41)
86, யோ,




06-06-94 இன்று காலை பத்து மணிக்கு

மங்களகரமான திறப்பு விழா

# சோழன்
# சாக்கு கொள்வனவு நிலையம்

சாக்கு விற்பனைக்கு வைத்துள்ளவர்கள் எம்முடன் நேரில் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

## சோழன்
## சாக்கு கொள்வனவு நிலையம்

காங்கேசன்துறை வீதி, சிவலிங்கப்புளியடி
யாழ்ப்பாணம்.

(சி-9606)


# கண்ணீர் அஞ்சலி

## திருமதி
## ஞானலஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

(ஆசிரியை மங்கையர்க்கரசி வித்தியாலயம் நல்லூர்)

எமது வித்தியாலயத்தில் ஆசிரியையாக கடமையாற்றிய திருமதி ஞானலஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களது திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் துயரமும் அடைகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

பளை மகாவித்தியாலயம்,
பளை.

(8488)

## அறிவித்தல்

## தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாணம்

வழ. இல. மணவிலக்கு 52|93

மை. செ. ஜோர்ச் சத்தியேந்திரா
பெண் டொமிற்றில்டா றஞ்சினி,
நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.
தற்போது, மணியரசன் வீடமைப்புத்திட்டம்,
அரியாலை, யாழ்ப்பாணம்.
வழக்காளி.

எதிர்

மைக்கல் செல்லத்துரைஜோர்ச் சத்தியேந்திரா
நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.
தற்போது, ஓமான். எதிராளி.

இத்தாற் சகலருமறிக, மேற்குறித்த வழக்காளி மேற்குறித்த எதிராளிக்கு எதிராக இந்த நீதிமன்றத்தில்தமக்கும்குறித்தஎதிராளிக்கும்இடையே12-5-1990 ஆம் திகதியில் நடைபெற்ற பதிவுத் திருமணம் மூலம் ஏற்பட்ட திருமண உறவை நீக்கி விவாகரத்து வழங்குமாறு கோரி இவ்வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

எனவே வழக்காளியின் கோரிக்கையை இம்மன்று பரிசீலிப்பதற்கு எதிராக ஆட்சேபனை ஏதும் இருப்பின் இவ்வறிவித்தல் பத்திரிகையில் விளம்பரப்படுத்திய திகதியில் இருந்து ஒரு மாத காலத்தினுள் தமது ஆட்சேபனையை இம்மன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
பதிவாளர்
1994-ம் ஆண்டு சித்திரை மாதம் 20-ம் திகதி
தமிழீழ மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

(8489)